பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி 12 திங்கட்கிழமை (26-05-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:181

# அரசின் சாதகமான பதில் கடிதத்துடன் நோர்வேக் குழு நாளை வன்னிக்கு?

## சொல்ஹெய்ம் கொழும்பில், ஹெல்கிஸன் இன்று வருகிறார்

கொழும்பு,மே26

வடக்கு - கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனரமைப்புக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வேண்டும் என்று விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள யோசனை தொடர்பாக அரசின் பதில நாளை நோர்வே அனுசரணைக்குழு மூலம் விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்படலாம்.

டோக்கியோ மாநாட்டில் கிடைக்கும் நிதியை வடக்கு - கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுப் பணிகளுக்கு கையாளக்கூடிய, சட்ட வலுவுள்ள அதிகாரமுடைய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என்று யோசனை தெரிவித்து விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் கடிதம் ஒன்றை நோர்வே அனுசரணைக் குழுவுக்கு அனுப்பி இருந்தார்.

இந்த யோசனையை அரசு ஆராய்ந்து புலிகள் ஏற்கக்கூடிய வகையில் ஒரு கட்டமைப்பை உருவாக்கக் கூடிய யோசனை ஒன்றை தயாரித்துள்ளது என்றும் -

இந்த யோசனை புலிகளின் கோரிக்கைக்கு சாதகமானதாக அமையும் என்றும் -

பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

நேற்றுக்காலை கொழும்பு வந்து

(14ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் சாரதிக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,மே26

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற பஸ் - சைக்கிள் விபத்து தொடர்பாக சம்பந்தப்பட்ட பஸ்ஸின் சாரதியை எதிர்வரும் 2 ஆம் திகதிவரை விளக்கமறியலில வைக்குமாறு யாழ்நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டிருக்கிறார்.

இந்த விபத்தில் அரியாலையைச சேர்ந்த குடும்பப் பெண்ணான நடராசா கேசவராணி என்பவர் உயிரிழந்தார் என்பது தெரிந்ததே.

இந்தச்சம்பவம் தொடர்பாக பஸ்ஸின் சாரதியான சரசாலையைச் சேர்ந்த முருகேசு சீவரத்தினம் என்பவரை யாழ்பொலீஸார் கைது செய்து நேற்று நீதிவான் முன்னிலையில் ஆஜர்

(14ஆம் பக்கம் பார்க்க)

# தென்மாகாண அமைச்சர் ஒருவர் கொழும்பில் சுட்டுக் கொலை!

## பொலீஸ் தலைமையகம் அருகே பாதுகாப்பு வலயத்தில் சம்பவம்

கொழும்பு,மே26

**தென் மாகாண சபையின் நீர்ப்பாசன, மீன்பிடி அமைச்சர் எம்.கே.ரஞ்சித் நேற்றுக் காலை கொழும்பு கோட்டையில் பொலீஸ் தலைமையகம் அமைந்துள்ள உயர் பாதுகாப்பு வலயத்தினுள் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். இத்துணிகரக் கொலை குறித்து விசேட பொலீஸ் குழு ஒன்று தீவிர விசாரணைகளில் இறங்கியிருக்கிறது.**

பொலீஸ் தலைமையகத்தின் குற்ற விசாரணைப் பிரிவுக்கு வந்த அவர், அங்கிருந்து வெளியேறிச் சென்ற சிறிது நேரத்தில் இனந்தெரியாதோரால் வீதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார் என பொலீஸார் தெரிவித்தனர்.

காலை 10.30 மணியளவில் யோர்க் வீதி - பார்ன் ஜயதிலக மாவத்தை வீதிச் சந்தியில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

தென் மாகாணசபை அமைச்சர் ரஞ்சித், தனது வீட்டில் ஆயுதங்கள் வைத்திருந்தார் என்று சில வாரங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டார். அதையடுத்து ஒவ்வொரு வாரத்திலும் ஞாயிற்றுக்கிழமைகளில் பொலீஸ் தலைமையக குற்றவிசாரணைப் பிரிவில் ஆஜராகுமாறு அவர் பணிக்கப்பட்டிருந்தார்.

அதன்படி, அவர் நேற்றுக் காலை குற்ற விசாரணைப் பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி மீண்டும் திரும்பிச் செல்கையிலேயே சுடப்பட்டார்.

வெள்ளை நிற வாகனம் ஒன்றில் வந்த நால்வர் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றிருக்கின்றனர் என்று கொழும்பு பிராந்திய பிரதிப் பொலீஸ் மா அதிபர் போதி லியனகே தெரிவித்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பொலிகண்டி மாணவர் வானில் கடத்தப்பட்டார்!

கரவெட்டி,மே26

யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒருவர் வடமராட்சியில் இலக்கத்தகடு அற்ற வெள்ளை நிற வான் ஒன்றில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டிருக்கிறார்.

நேற்றுமுன்தினம் மாலை 5.00 மணியளவில் பொலிகண்டியில் வைத்து இவர் கடத்தப்பட்டார்.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

யாழ்.பல்கலைக் கழக மீன்பிடியியல் டிப்ளோமா முதலாம் ஆண்டு மாணவனான சிவபாலசிங்கம் சரவணன் (வயது 21) என்பவரே கடத்தப்பட்டிருக்கிறார் என்று அவரது தந்தையாரான கிராம அலுவலர் சி.சிவபாலசிங்கம் வல்வெட்டித்துறை பொலஸ் நிலையத்திலும் விடுதலைப் புலிகளின் வல்வெட்டித்துறை அலுவலகத்திலும் முறையிட்டிருக்கிறார்.

பொலிகண்டியைச் சேர்ந்த பிரஸ்தாப மாணவன், திருநெல்வேலிப் பகுதியில் வீடு ஒன்றில் தங்கியிருந்து கல்விகற்று வந்தவர்.

பொலி கண்டியில் விளையாட்டுப் போட்டி ஒன்றுக்காக சிறுவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக இவர் அங்கு சென்று வருவது வழக்கம்

(14ஆம் பக்கம் பார்க்க)

### அமைச்சர் மொறகொட நாளை டோக்கியோ செல்கிறார்

கொழும்பு,மே26

டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கான ஏற்பாடுகளைக் கவனிக்கும் பொருட்டு, விஞ்ஞான தொழில் நுட்ப பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட நாளை ஜப்பான் பயணமாகின்றார்.

உதவி வழங்கும் மாநாட்டில் பெரும் எண்ணிக்கையான நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்ள இருப்ப

(14ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஹக்கீம் நோர்வே சென்றார்

கொழும்பு,மே26

அமைச்சர் ரவூப் ஹக்கீம் நோர்வே நாட்டுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் முன்னெடுப்பதன் அவசியம் குறித்தும் -

ஜப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு குறித்தும் -

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீட்டர்ஷனுடன் பேச்சுக்களை நடத்துவதற்காகவே அமைச்சர் ஹக்கீம் அங்கு பயணமாகியுள்ளார். இது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரம

(14ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகத்துக்கு இ.தொ.கா. முழு ஆதரவு!

கொழும்பு,மே26

வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக அமைப்பு தொடர்பான விடுதலைப் புலிகளின் யோசனைக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தனது முழு ஆதரவை வழங்கும் என்று காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற காங்கிரஸின் நிர்வாக உத்தியோகத்தர் கூட்டத்தில் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார் என்று காங்கிரஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## சு.க. - ஜே.வி.பி. இணக்கப்பாடு குறித்து நாளை சு.க.மத்தியகுழு கூடி ஆராயும்


கொழும்பு,மே26

சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான தேசிய முன்னணி குறித்து ஏற்பட்டுள்ள இணக்கப்பாடு நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும் சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் முன்வைக்கப்படும்.

தேசிய முன்னணி குறித்து இரு கட்சிகளுக்கும் இடையே இணக்கப்பாடு காணப்பட்டிருக்கின்றபோதிலும் முன்னணியாகச் செயற்படுகையில் பயன்படுத்தும் தேர்தல் சின்னம், பெயர் ஆகியவை குறித்து இன்னமும் இறுதி இணக்கம் காணப்படவில்லை.

நாளை நடைபெறும் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் இந்த

(14ஆம் பக்கம் பார்க்க)



இப்பொழுது தேசிய சேமிப்பு வங்கி 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு...

நிலையான வைப்புகளுக்கு 1.5% மேலதிக மாதாந்த வட்டியை வருடாந்தம் வழங்குகின்றது.

இன்றே அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தற்போது நடைமுறையிலுள்ள வட்டி வீதம் 9.7% வருடாந்த விளைவு வட்டி 10.1%

கௌரவ

மூத்த பிரஜைகளை கௌரவிக்கும் திட்டம்

NSB

உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி

## சூழல் பாதுகாப்புக்குழு தீர்மானம்

# தென்மராட்சியில் அகழப்படும் மணல் அப்பிரதேச மீள் கட்டுமானத்துக்கே!

## வேறு இடங்களுக்குக் கொண்டுசெல்லத் தடை

கொடிகாமம்,மே26

தென்மராட்சியில் அகழ்ந்தெடுக்கப்படும் மணல் அந்தப் பிரதேசத்தின் கட்டுமானப் பணிகளுக்கே பயன்படுத்தப்பட வேண்டும்.

- இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது தென்மராட்சி சூழல் பாதுகாப்புக்குழு.

மேற்படி குழுவின் கூட்டம் கடந்த வெள்ளியன்று தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் க.கேதீஸ்வரன், கச்சாய், வரணி, நாவற்குழி, கோகிலாக்கண்டி பிரதேசக் குழுக்களின் பிரதிநிதிகள் மற்றும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை, வருவாய்த் துறையினர், பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யுத்த சூழல் காரணமாக தென்மராட்சிப் பகுதியின் பல்வேறு இடங்களிலும உள்ள வீடுகள், பாடசாலைகள், பொதுக் கட்டடங்கள், மதவழிபாட்டுத தலங்கள், தனியார் கட்டடங்கள் என்பன பலத்த சேதமடைந்தும், முற்றாக அழிந்தும் உள்ளன.

எனவே, இவற்றை மீள நிர்மாணிக்க மணல் இன்றியமையாததாகுகின்றது. போதிய மண்வளம் இல்லாத நிலையில், தென்மராட்சியில் இருந்து மணலை அகழ்ந்து குடாநாட்டின் ஏனைய இடங்களுக்கு எடுத்துச் செல்வது நிறுத்தப்படவேண்டும் என இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட பலரும் கோரிக்கை விடுத்தனர். இதனையடுத்து தென்மராட்சியில் இருந்து வெளியிடங்களுக்கு மணல் எடுத்துச் செல்வதை தடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

★ கச்சாய்ப் பகுதியில் ஏற்கனவே மணல் அளவுக்கதிகமாக அகழப்பட்டதால் கடல்நீர் கிராமத்துக்குள் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அத்துடன், பெரும் எண்ணிக்கையான பனை மற்றும் தென்னை மரங்கள் தறிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், மண்விறபனையால் பெருமளவிலான மரங்களும் வேரோடு சாய்ந்துள்ளன. எனவே, அங்கு மண்வளம் அழிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதியில் மணல் அகழ்வதைத் தடைசெய்வது தொடர்பான தீர்மானத்தை நடைமுறைப்படுத்தல்.

★ வரணிப்பகுதியில் சூழல் பாதுகாப்புக் குழுவினால் பொது இடத்தில மணல் பறிக்கப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும்.

★ நாவற்குழி, கோகிலாக்கண்டிப பகுதியில் சூழல் பாதுகாப்புக் குழுவின் சிபாரிசுடன், மணல் ஏற்றும் இடத்துக்குச் சென்று மணல் ஏற்றமுடியும்.

★ மணல் விநியோகம் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் இடம்பெறும்.

★ நபரொருவர் ஒருநாளைக்கு 5 லோட் மணல் மாத்திரமே ஏற்றமுடியும்.

★ மணல் விநியோகத்திற்கான கண்காணிப்பாளராக கிராம அலுவலர்களும், அரசியல் பிரமுகர்களும், பொலீஸாரும் செயற்படுவர்.

இவ்வாறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

(எ-74)

## மாத்தறையில் நிவாரணப்பொருள் விநியோகத்தில் நிகழ்ந்த சம்பவம்

# மகனே! மீண்டும் போரிட மாட்டீர்கள்தானே? புலிகளின் கரங்களைப் பிடித்து மூதாட்டி கேள்வி

கொழும்பு,மே26

"மகனே! மீண்டும் போரிட மாட்டீர்கள்தானே?" என்று மாத்தறையைச் சேர்ந்த ஒரு சிங்கள மூதாட்டி விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி அரசியல் பொறுப்பாளர் அன்பரசனின் கைகளைப் பிடித்துக்கொண்டு கேள்வி எழுப்பினார். "இல்லை, இல்லை நாங்கள் மீண்டும் யுத்தம் புரியமாட்டோம்." - என்று அன்பரசன் தமிழில் அந்த சிங்கள மூதாட்டியிடம் பதிலுக்குக் கூறினார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாத்தறை மாவட்டத்துக்கு விடுதலைப் புலிகள் நேற்றுமுன்தினம் நிவாரணப் பொருள்களை எடுத்துச்சென்றபோதே உருக்கமான இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

புலிகளின் கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பரசன, வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் ஆகியோர் அடங்கிய குழுவினர் சமூக அபிவிருத்தி அமைச்சர் பெ.சந்திரசேகரன், தமிழ்க் கூட்டமைப்பு எம்பி. கே.சிவாஜிலிங்கம் ஆகியோருடன் மாத்தறை சென்றிருந்தனர்.

மாத்தறை செயலகம் முன்றிலில அமைச்சர் மஹிந்த விஜேசேகர உட்பட எம்பிக்கள், மாகாணசபை, பிரதேச சபை உறுப்பினர்கள், மாத்தறை மாநகரசபை மேயர், உதவி மேயர் உட்பட பெருந்திரளான மக்கள் திரண்டுவந்து புலிகளை வரவேற்றனர். பௌத்த முறைப்படி வெற்றிலை கொடுத்து மலர் மாலை அணிவித்து அவர்கள் கோலாகலமாக வரவேற்கப்பட்டனர்.

செயலக முன்றிலில் அரசாங்க அதிபரிடம் நிவாரணப் பொருள்களை புலிகள் ஒப்படைத்தனர். பின்னர் மாத்தறை நகரிலுள்ள ஊறுமுத்த பௌத்த விகாரையின் விகாராதிபதியின் அழைப்பை யேற்று அவர்கள் அங்கு விஜயம் செய்தனர். விகாரையிலும் பெருந்திரளான மக்கள் திரண்டுவந்து வரவேற்பளித்தனர். மக்கள் மலர்த் தட்டுக்களை புலிகளின் பிரதிநிதிகளிடம் வழங்கி வழிபாட்டில் ஈடுபட உதவினர்.

### போக்குவரத்தும் ஸ்தம்பித்தது

விகாரைக்குப் புலிகளின் பிரதிநிதிகள் வந்த செய்தி விகாரையிலிருந்து ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்புக்குப் பின்னர் விகாரையின் முன்னால் உள்ள பிரதான வீதியில போக்குவரத்து ஸ்தம்பித்தது. வீதிகளில் சென்றுகொண்டிருந்த மக்கள் திரண்டுவந்து வியப்புடன் புலிகளைப் பார்த்துக்கொண்டிருந்தனர். இவ்வேளையிலேயே சுமார் 70 வயது மதிக்கத்தக்க மூதாட்டி ஒருவர் அன்பரசனிடம் மேற்குறிப்பிட்ட கேள்வியை எழுப்பினார்.

புலிகளுக்கென விகாரையில் விசேட 'பிரித்' ஓதும் வைபவம் ஒன்றும் இடம்பெற்றது. 'பிரித்' ஓதும் வைபவம் முடிவுற்றதும் பௌத்த முறைப்படி புலிகளின் பிரதிநிதிகளுக்கு கைகளில் 'பிரித்' நூலை விகாராதிபதி கட்டினார்.

(ஐ)

# அம்பாறை கரையோரப் பகுதிக்கு தனியான மாவட்டம் பயன்தராது!

## அமைச்சர் அதாவுல்லா பகிரங்க அறிவிப்பு

கல்முனை,மே26

அம்பாறை கரையோரப் பகுதிக்கு என தனியான மாவட்டம் ஒன்றை உருவாக்குவது முஸ்லிம்களுக்குப் பயன்தராது. அது பாதிப்பை ஏற்படுத்தும். குடியிருப்பு நிலங்களை மாத்திரம் உள்ளடக்கிய கரையோர மாவட்டத்தினால் முஸ்லிம்களின் எதிர்காலம் வளமுள்ளதாக அமையாது.

- இவ்வாறு கூறினார் அஷ்ரப் காங்கிரஸ் தவிசாளரும், நெடுஞ்சாலைகள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா. கடந்த வெள்ளிக்கிழமை மருதமுனையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அம்பாறை கரையோரத் தனி மாவட்டம் பற்றி அமைச்சர் மேலும் கூறியதாவது:-

தனியான கரையோரக் கச்சேரிக் கோரிக்கையை முன்வைத்து நமது தலைவர்கள் போராட்டம நடத்தியிருக்கின்றார்கள் ஆனால்; அவ்வாறான கச்சேரி ஒன்று அவசியம் தானா என்பது பற்றி இப்பகுதி புத்திஜீவிகள் கூடி ஆராயவேண்டும்.

வெறும் குடியிருப்பு நிலங்களை மட்டும் உள்ளடக்கி கரையோர மாவட்டம் ஒன்றை அமைப்பதால் நமது சமூகம் பெறப்போகின்ற நன்மைகள் எவை? கரையோரத்திற்கு வெளியே அம்பாறைத் தொகுதியில் நிறையக் காணிகள் இருக்கின்றன.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை முழு அம்பாறை மாவட்டத்திலும் சுதந்திரமாகச் சென்று குடியேறுவதற்குரிய ஏற்பாடுகளே செய்யப்படவேண்டும். கரையோரக் கச்சேரி அமைவதில் எந்த உடன்பாடு கிடையாது. நான் அமைச்சராக்கிடம் ஆரம்பத்திலேயே கூறியிருந்தேன் மக்களை ஏமாற்றுவதற்காகக் கரையோரக் கச்சேரி பற்றிப் பேச வேண்டாம் என்று சொன்னேன்.

நூறு நாள்களுக்குள் கரையோர மாவட்டத்தைப் பெற்றே தீருவோம் என்று ஹக்கம் மேடையில் பேசினால கரகோஷமும், கைதட்டலும் கிடைக்கும் இதுதான் நமது மக்களின் தலை விதி. கரையோரக் கச்சேரி விடயத்தில் பிரதேச வாதம் தூண்டப்பட்டு மக்கள் கூறு போடப்பட்டார்களே தவிர, உருப்படியான காரியம எதுவும் நடக்கவில்லை.

-இப்படி அவர் கூறினார்.

### கொடிகாமம் மருந்தகத்தில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

மிருசுவிலில் இயங்கும் கொடிகாமம வைத்திய மருந்தகமும் மகப்பேற்று மருத்துவ நிலையமும் மீண்டும் செயற்பட ஆரம்பித்ததை அடுத்து நாள்தோறும எழுதுமட்டுவாழ், கரம்பகம், கெற்பெலி, கொடிகாமம் உட்பட ஏனைய கிராமங்களைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான நோயாளிகள் அங்கு சென்று சிகிச்சைபெற்று வருகின்றனர்.(எ-31)

# அம்பாறையில் இந்து மாநாடு நடத்த மகேஸ்வரன் உறுதி

காரைதீவு,மே26

2 ஆவது உலக இந்து மாநாட்டை நடத்துவதில் அம்பாறை மாவட்டம் புறக்கணிக்கப்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டுக்களை அடுத்து எவ்வளவு செலவானாலும் பறவாயில்லை மிகப்பெரிய அளவில் இந்து மாநாட்டை அம்பாறை மாவட்டத்தில் அங்குள்ள இந்து சபைகள் மற்றும் இந்துப்பெருமக்களின் ஒத்துழைப்புடன் நடத்துவது என்று இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் உறுதியளித்திருக்கிறார்.

அதையடுத்து சிறிய அளவில் ஒப்புக்காக எதிர்வரும் 31 மற்றும் ஜூன் முதலாம் திகதி ஆகிய இரு தினங்களிலும் காரைதீவு விபுலானந்த மணிமண்டபத்தில் இந்துசமய கலாசார அமைச்சு நடத்தத் திட்டமிட்டிருந்த மாநாடு ரத்துச்செய்யப்பட்டுவிட்டது. புதிதாக மாநாட்டை எங்கே, எப்போது, எப்படி நடத்துவது என்று தீர்மானித்து வேண்டிய ஒழுங்குகளைச் செய்யும் பொறுப்பை பிரதேச இந்து அமைப்புக்களிடமும், இந்துப் பெரியார்களிடமும் அமைச்சர் ஒப்படைத்திருக்கிறார்.

மாநாட்டை முன்னர் காரைதீவில் போல் இனி அக்கரைப்பற்றில் பெரிதாக நடத்துவதற்கான விழிப்புணர்வுக கூட்டம் கடந்த சனிக்கிழமை நடந்த போதே கூட்டத்தின் முக்கியஸ்தர்களில ஒருவரான அம்பாறை மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் த. கயிலாயபிள்ளையுடன் அமைச்சர் மகேஸ்வரன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மாநாட்டுக்குத் தனது பூரண ஆதரவைத் தெரிவித்தார்.

(ஐ)

# 'புலிகளின் குரல்' வானொலியின் சிறப்பு முத்தமிழ்க் கலையரங்கம்

## பல்கலைக் கழகத்தில் இன்று

யாழ்ப்பாணம்,மே26

மூத்த கலைஞர், நாட்டுப்பற்றாளா வி.ரி.ஏ.விஸ்வா நினைவாக 'புலிகளின் குரல்' வானொலி நடத்தும் சிறப்பு முத்தமிழ்க் கலையரங்கம் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

திருமதி ஆனந்தஜோதி சுதர்சனின மாவீரர் வணக்க நடனத்துடன் ஆரம்பமாகும் நிகழ்வில் சிறப்புரை, நினைவுரை, இறுவட்டு வெளியீடு, 'விஸ்வாவின் நினைவலைகள்' நூல் வெளியீட்டுரை, 'மண்ணும் மனிதமும்' என்னும தலைப்பில் கவியரங்கம், என்எஸ்மணியத்தின் நெறியாள்கையில் முள்ளியவளை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் வழங்கும் நாட்டுக்கூத்து ஆகியன இடம்பெறும்.

(ஐ-3)

# யாழ்.சிறுவர்களின் பிரச்சினை: ஜூன் 7இல் இங்கு மாநாடு

யாழ்ப்பாணம்,மே26

'குடாநாட்டுச் சிறுவர்கள் எதிர்நோககும் பிரச்சினைகளும், அவற்றுக்கான தீர்வுகளும்' என்ற பொருளிலான சிறுவர் மாநாடு அடுத்த மாதம் 7ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு நிதியம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

மேற்படி மாநாடு குறித்த செய்தியாளர் கூட்டம் நேற்று யாழ். கோவில் வீதியில் உள்ள சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அலுவலகத்தில் நடைபெற்றது.

நிதியத்தின் மாவட்ட இணைப்பாளர் கே.செல்வரட்ணம், நிகழ்ச்சித் திட்ட அலுவலர் ஜெ.தற்பரன், ஊடகத் துறைக்குழு இணைப்பாளர் எஸ். சதீஸ் மற்றும் ஒழுங்கமைப்புக்குழுச் சிறார்கள் கலந்துகொண்டனர்.

சிறுவர்மாநாடு குறித்து இந்தக் கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

யாழ்.மாவட்டத்தின் சகல பகுதிகளையும் சேர்ந்த சுமார் ஆயிரத்து 500 சிறுவர்களை உள்ளடக்கியதாக இந்த மாநாடு நடைபெறும்.

அரச மற்றும் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரதிநிதிகளும், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இதில் பங்குபற்றுவர்.

இந்த மாநாட்டில் பங்குபற்றும் சிறுவர்கள் கல்வி வலயங்களினூடாகவும், பிரதேச சபைகளினூடாகவும் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

இந்த மாநாட்டுக்கான முன்னோடி நிகழ்வொன்று எதிர்வரும் 31ஆம், முதலாம் திகதிகளில் யாழ்.பல நோ.கூ. சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டது.(எ-12)

# சர்வதேச உதவிகள் கைக்கு எட்டும்வேளை குழப்பத்தை ஏற்படுத்துகிறார் ஜனாதிபதி

## அமைச்சர் திஸநாயக்கா குற்றச்சாட்டு

கொழும்பு, மே26

கிராமங்களின் அபிவிருத்திக்காக சர்வதேச சமூகம் நிதியுதவி வழங்க முன்வரும் வேளையில் ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி குழப்ப நிலையை ஏற்படுத்தி வருகிறார்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா. நேற்று நுவரெலியாவில் இடம்பெற்ற ஐ.தே.க. கட்சிக் கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

லெத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றது சட்டத்துக்கு விரோதமான செயலாகும். இது புதிய அரசினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி முயற்சிகளைக் குழப்பும் செயலாகும் - என்றும் அவர் அங்கு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ, பிரதி அமைச்சர் நவீன் திஸநாயக்கா, நாடாளுமன்ற உறுப்பினர் கே.வேலாயுதம் உட்படப் பலரும் உரையாற்றினார்கள்.

(ஐ-9)

# தெற்கு வெள்ள நிவாரண நிதிக்கு தோட்டத் தொழிலாளர்களும் உதவி

தென்பகுதி வெள்ளம் மற்றும் மண சரிவுகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண நிதிக்கு இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க அங்கத்தினர்கள் தலா நூறு ரூபாவை வழங்குவர். இந்த நிதி பிரதமர் ரணில விக்கிரம சிங்கவிடம் நேரடியாகக் கையளிக்கப்படும்.

நேற்றுமுன்தினம் இராஜகிரியவில் உள்ள மேற்படி சங்கத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற விசேட நிர்வாக சபைக்கூட்டத்தில் இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

பதுளை மாவட்ட எம்.பியும் இ.தே.தோ.தொ.ச. பொதுச் செயலாளருமான கே.வேலாயுதம் இத்தகவலைத்தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதில் தோட்டத் தொழிலாளரும் தமது பங்களிப்பைச் செய்யவேண்டும் என்று வேலாயுதம் எம்.பி. இக் கூட்டத்தில் பிரேரணை ஒன்றை முன வைத்தார்.

நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவரும் அதனை ஏகமனதாக அங்கீகரித்தனர்.

இத்தீர்மானம் தொடர்பாக சகல மாவட்ட, மாநில தலைவர்களுக்கும் சுற்றறிக்கைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. சங்க உறுப்பினர்கள் ஒவ்வொருவரிடமும் நூறு ரூபாவை அறவிட்டு அனுப்பிவைக்குமாறு தோட்டக் கம்பனிகளுக்கும் தோட்டத் துரைமார் சம்மேளனத்துக்கும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

(ஐ)





அல்ஜீரியாவில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் பத்துமாடிகளைக் கொண்ட அரச கட்டடம் ஒன்று தகர்ந்து கிடப்பதை முதல் பட[illegible]லும் தனியார் கட்டடம் ஒன்றின் நிலையை இரண்டாவது படத்திலும் இடிபாடுகளுக்கிடையே இருந்து இரண்டு வயதுக் குழந்தை மீட்கப்படுவதைக் கடைசிப் படத்திலும் காணலாம்.

## பூகம்ப நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகள் சீரில்லை

# அரசின் மெத்தனத்தால் மக்கள் ஆத்திரம்:

# அல்ஜீரிய அதிபர் மீது கல்வீசித் தாக்குதல்!

பூமெர்டெஸ்,மே26

அல்ஜீரிய நில நடுக்கத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்தை எட்டியுள்ளது. இடிபாடுகளில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. சிலர் உயிருடனும், சிலர் பிணமாகவும் மீட்புப் பணியாளர்களால் வெளியே எடுக்கப்பட்டுள்ளனர்.

அல்ஜீரியாவில் கடந்த 21 ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தில் பூமெர்டெஸ் நகரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள பெரும்பாலான கட்டடங்கள் தரைமட்டமாகியுள்ளன. இதுவரை இந்த நகரில் 850 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன இந்த அனர்த்தத்தில் இதுவரை 2000 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வீடுகளை இழந்தவர்களுக்கு யுனிசெவ் நிறுவனம் உணவுப் பொருள்களை வழங்கி வருகிறது. பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மன், ஸ்பெயின், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளின் மீட்புப் படையினரின் மோப்ப நாய்களின் உதவியுடன் இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களைக் கண்டறிந்து மீட்டு வருகின்றனர். பிரான்ஸ் நாட்டு மீட்புக் குழுவினர் தற்காலிக மருந்துவமனை ஒன்றை அங்கு அமைத்து காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளித்து வருகின்றனர்.

தலைநகர் அல்ஜீயர்ஸில் உள்ள பத்து மாடிக் கட்டடம் ஒன்று நில நடுக்கத்தில் தரைமட்டம் ஆனதால் அதனுள் இருந்த நூற்றுக்கணக்கானோர் பலியாகியுள்ளனர் நான்கு நாள்கள் கடந்து விட்ட நிலையில் கட்டட இடிபாடுகளுக்குள் இருக்கும் சடலங்கள் துர்நாற்றம் அடிக்க ஆரம்பித்துள்ளன. இதனால், தொற்று நோய் பரவாது தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை அந்நாட்டு அரசு மேற்கொண்டு வருகிறது. பூகம்பத்தில் தனியார் கட்டடங்கள் குறைந்த பாதிப்பையே அடைந்துள்ளன. அரச வீடமைப்புத் திட்டங்கள் பூமி நடுக்கத்தில் தரைமட்டமாகியுள்ளன. இதற்குப் பிரதான காரணம் தரக்குறைவாக கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டமையே ஆகும்.

அத்துடன் மீட்புப் பணிகளிலும் அதிகாரிகள் மெத்தனம் காட்டி வருவதாகக் கூறப்படுகிறது. பூகம்பம் ஏற்பட்டு சில நாள்கள் கடந்த நிலையில இடம்பெயர்ந்தவர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால், மக்கள் கடும் ஆத்திர முற்றுள்ளனர்.

இந்நிலையில் அல்ஜீரிய அதிபர் அஸீஸ் பௌட்டெல் பிளவ் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பகுதி ஒன்றை நேரில் பார்வையிடச் சென்றார். அப்போது அதிபரின் வாகனம் மீது மக்கள் கல்லெறிந்து தாக்குதல் நடத்த முயற்சித்தனர். பாதுகாப்பு அதிகாரிகள் பொதுமக்களிடமிருந்து அதிபரைக் காப்பாற்றி அழைத்துச் சென்றனர்.

இதேவேளை, ஆறுமாடிக் கட்டடமொன்றின் இடிபாடுகளுக்குள்ளிருந்து 'சுப்ரினா' என்னும் சிறுமி நேற்று முன்தினம் காப்பாற்றப்பட்டார்.

நில நடுக்கத்தினால் தலைநகரில் இருந்து கிராமப் பகுதிகளுக்குள் செல்லும் வீதிகள் உடைந்துவிட்டன. இஸ்லாமியப் போராளிகளின் தாக்குதல்களுக்கு அஞ்சி அதிகாரிகள் அப்பகுதிகளுக்குச் செல்வதைத் தவிர்த்து வருகின்றனர். வீதித் திருத்த வேலைகளில் ஈடுபடும் பொறியியல் பகுதியினர் ஆயுதப் படைகளின் பாதுகாப்புடனேயே பணிகளில் ஈடுபடுகின்றனர். போக்குவரத்தில் நெரிசல்களும் ஏற்பட்டுள்ளன. தொலைபேசிகளும் தொழிற்படவில்லை. வைத்தியசாலைகள் நிரம்பி வழிகின்றன. காயமடைந்த 7,000 பேர்களுக்கு சிகிச்சையளிப்பதில் சர்வதேச அமைப்புகள் உதவி புரிந்து வருகின்றன.

தலைநகர் அல்ஜீயர்ஸுக்கு கிழக்கே 35 கி.மீ.தூரத்தில் ரெபிலா என்னுமிடத்தில் மக்கள் இன்னும் தத்தமது வீடுகளுக்குச் செல்லாமல் பொது இடங்களில், தரையில் படுத்துறங்குகிறார்கள். (ஏ)

## செவ்வாயில் உயிரினங்கள் வாழ அதிக வாய்ப்புண்டு!

### விஞ்ஞானிகள் நம்பிக்கை

லண்டன்,மே26

செவ்வாய்க்கிரகத்தில் உயிரினங்கள் இருப்பதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

துவதாக விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

அத்துடன் செவ்வாய்க்கிரகத்தின மேற்பரப்பிலிருந்து தெறிப்படையும் ஒளிக்கதிர்களை அல்பெடர் முறை மூலம் விஞ்ஞானிகள் ஆராய்ந்து பார்த்



செவ்வாய்க் கிரகத்தில் மண்மேடுகள்.

செவ்வாய்க்கிரகத்தின் புகைப்படங்களை ஆராய்ந்தபோது அங்கு பனிப்படலங்களும் மணல் திட்டுகளும் உருவாவதும், மறைவதும் கண்டறியப்பட்டுள்ளது. பனிப்படலங்கள் இருப்பதால் அங்கு நீர் இருப்பது உறுதியாகியுள்ளது. இதேவேளை, மணல் திட்டுகள் உருவாவதற்கு காற்றின் வேகம் தேவைப்படும். செவ்வாய்க்கிரகத்தில் மணல் திட்டுகள் உருவாகி மறைவது அங்கு காற்று வீசுவதை உறுதிப்படுத்துனர். இந்த ஆய்வில் செவ்வாய்க்கிரகத்தின் மேற்பரப்பில் வெப்பம் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உயிரிகள் வாழ்வதற்கு காற்று, நீர், வெப்பம் ஆகியவை அவசியமாகும். இந்த மூன்றும் செவ்வாய்க்கிரகத்தில் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் இருப்பதற்கு அதிக வாய்ப்புள்ளதாக விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.(ஏ)

## ஒரு கோடி டொலர் நஷ்ட ஈடு!

அமெரிக்காவில் மது வகைகள், உணவுப்பொருள்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் 'மக்டொனால்ட்' நிறுவனம் அதன் வாடிக்கையாளர்களில் 24 பேருக்கு ஒரு கோடி டொலர்கள் நஷ்டஈடு வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. அந்த நிறுவனம் சமீபத்தில் தயாரித்த பதப்படுத்தப்பட்ட பொரியல் வகை உணவில் மரக்கறி எண்ணெயே பயன்படுத்தப்பட்டுள்ளதாக விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது.

ஆனால், சோதனையில் அதில் மாட்டு இறைச்சி மற்றும் கொழுப்பு சேர்க்கப்பட்டிருப்பது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து சிக்காகோ நீதிமன்றத்தில் வாடிக்கையாளர்கள் வழக்குத் தொடர்ந்தனர். இந்த வழக்கில் ஒரு கோடி டொலர்கள் நஷ்டஈடு வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## 15 ஆண்டுகளாக வாடாத பூ ஜேர்மனியில் நாற்றமடிக்கிறது!

பேர்லின்,மே25

ஜேர்மன் பல்கலைக்கழகத்தில் வளர்க்கப்படும் இந்தோனிஷிய நாட்டுத் தாவரத்தின் மலர் ஒன்று கடந்த பதினைந்து ஆண்டுகளாக வாடாமல் உள்ளது. ஆனால் இந்தப் பூ நறுமணத்தை அளிப்பதற்கு பதில் துர்நாற்றத்தைப் பரப்புவதாக பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனுடைய தாவரவியல் பெயர் 'டைட்டான் அரும்' (Titan Arum) பூச்சிகளை வசீகரிக்கவே இந்தப் பூ துர்நாற்றத்தைப் பரப்புவதாகவும், பூச்சிகளின் மூலம் தான் மகரந்த, சேர்க்கை நடைபெறுவதாகவும் தாவரவியல் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பூவே உலகில் மிகப்பெரிய பூவாகவும் கருதப்படுகிறது. ஜேர்மனின் பான் பல்கலைக்கழகத்தில் உள்ள தாவரவியல் தோட்டத்தில் இந்தப் பூவும், அதன் செடியும் உள்ளன.

இந்த அபூர்வ தாவரப் பூவின் உயரம் மட்டும் 2.74 மீற்றர். 78கிலோ எடையுடையது இந்தப் பூ. இந்தப் பூவின் செடி 40ஆண்டு காலம் வாழக் கூடியது. இதுவரை இச்செடி இது போன்ற இரண்டு பூக்களை மட்டும் இராட்சத அளவில் பூத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

1878ஆம் ஆண்டு சுமத்ரா தீவில் இந்தத் தாவரம் முதன் முறையாக ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. (ஏ)

## கல்லீரலில் உருவான குழந்தை தென்னாபிரிக்காவில் பிறந்தது!

கேப்டவுன்,மே26

தென்னாபிரிக்காவில் நிசே சுவைதா (வயது 20) என்ற பெண்ணின் கல்லீரல் பகுதியில் உருவான குழந்தை பிரசவமானது.

நிசே சுவைதா கர்ப்பம் தரித்து இருந்தவேளை, மருத்துவ பரிசோதனைக்குச் சென்றார். வைத்தியர்கள் பரிசோதித்துப் பார்த்தபோது சுவைதாவின் கர்ப்பப்பை காலியாக இருந்தது. ஆனால், கல்லீரலில் குழந்தை உருவாகி வளர்ந்து கொண்டு இருப்பது தெரியவந்தது.

இதனால் சத்திர சிகிச்சை மூலம், சுவைதாவின் கல்லீரலில் வளர்ந்த, பெண் குழந்தை பிரசவிக்கப்பட்டது.

அக்குழந்தை 2.8கிலோ எடையுடன் நலமாக இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

கல்லீரல் நிபுணர் ஜாக்கிரிஜ் என்பவரின் உதவியுடன் வைத்தியர்கள் பிரசவம் பார்த்தனர். கர்ப்பப் பைக்கு வெளியே உருவான குழந்தை பிறந்தது.

இப்படிக் குழந்தை பிறப்பது, தாயின் உயிருக்கு மிகவும் ஆபத்தானது இது ஓர் அதிசயக் குழந்தை என்று பிரசவம் பார்த்த வைத்தியர்கள் ஆச்சரியம் தெரிவித்துள்ளனர். தாயின் கருப்பைக்கு வெளியே, சிசு உருவாகிப் பிறந்த சம்பவங்கள் இது வரை 14மட்டுமே பதிவில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

## அல்கெய்டாவின் பார்வை நோர்வே பக்கம் திரும்பியது

அமெரிக்கர்கள், யூதர்கள் மீது முஸ்லிம்கள் புனிதப்போர் நடத்த வேண்டும். அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, நோர்வே ஆகிய நாடுகளில் உள்ள தூதரகங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தவேண்டும்.

- இவ்வாறு அல்-கெய்டா அமைப்பின் முக்கிய தலைவர் ஒருவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்கர்கள், யூதர்கள் மீது புனிதப்போர் நடத்தும்படி முஸ்லிம்களுக்கு அல்கெய்டா தலைவர் ஒஸாமா பின்லேடனின் வலதுகரமாகச் செயற்படும் அய்மன் அல்ஜவாரி உத்தரவிட்டுள்ளார். இவரது பேச்சை அல்-ஜெஸீரா தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

அமெரிக்காவில் 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் அல்கெய்டா தீவிரவாதிகள் பயங்கரத் தாக்குதலை நடத்தினர். இதையடுத்து ஆப்கானிஸ்தானில் தஞ்சமடைந்திருந்த அல்கெய்டா தீவிரவாதிகளை தாக்குதல் நடத்தி நாட்டை விட்டே அமெரிக்கா வெளியேற்றியது.

இச்சம்பவங்களையடுத்து, ஆத்திரமடைந்த அல்கெய்டா அமைப்பினர், உலகளவில் இருக்கும் அமெரிக்கர்கள், யூதர்கள் மீது தாக்குதல் நடத்தவேண்டும் என்று முஸ்லிம்களுக்கு உத்தரவிட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் கட்டாரில் உள்ள அல்-ஜெஸீரா தொலைக்காட்சி ஒஸாமாவின் வலதுகரமாக செயற்படும் அய்மன் அல்ஜவாரியின் பேச்சை ஒளிபரப்பியது.

அல்கெய்டாவின் கட்டளையால் அமெரிக்கா ஆட்டிப்போயுள்ளது. இராணுவ இடங்களில் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று அமெரிக்க இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். இதனையடுத்து இராணுவம் சம்பந்தப்பட்ட இடங்களில் கடுதல் பாதுகாப்புப் பணியை அமெரிக்கா மேற்கொண்டுள்ளது.

இதேசமயம், நோர்வே மீது தாக்குதல் நடத்தும்படி அல்கெய்டா உத்தரவிட்டுள்ளமை புதிராக உள்ளது என்று இராஜதந்திரிகள் கூறுகின்றனர். ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்த நோர்வே எந்த வகையிலும் உதவவில்லை அமெரிக்காவின் படையெடுப்பை நோர்வே எதிர்த்தது. இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனர்களுக்கு இடையே சமாதானத் தூதுவராக நோர்வே செயற்பட்டுவருகிறது. டென்மார்க்கை நோர்வே என்று தவறாகப் புரிந்திருக்கலாம் என்று இராஜதந்திரிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை -

ஒஸாமா பின்லேடனின் தளபதி ஒருவரின் ஒலிநாடாப் பேச்சை அல்-ஜெஸீரா தொலைக்காட்சி நிறுவனம் மீண்டும் ஒளிபரப்புவதைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என அமெரிக்கா கேட்டுள்ளது.

அல்-ஜெஸீரா தொலைக்காட்சியின் இதுபோன்ற நடவடிக்கைகளால் வளைகுடாப் பிராந்தியத்தில் பதற்றநிலை ஏற்படுகிறது என்றும் பயங்கரவாதிகள் தங்களது செய்திகளை பரப்ப தொலைக்காட்சி ஒரு சாதனமாக தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்றும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் கூறினார். (ஏ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

பலாலி தெற்கு, வசாவிளானைச் சேர்ந்த வேலன் தவராசா என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 442541477V) நுணாவில் சந்திக்கும் கைதடி, நுணாவில் வைரவர் கோவிலடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தென்மராட்சி மினிபஸ் சங்கத்தில் ஒப்படைத்து உதவவும்.

(18404)

### வீடு விற்பனைக்கு / வாடகைக்கு

இல.19, கடைச்சாமி வீதி, யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளுடன் கூடிய 2 3/4 பரப்புக் காணியில் அமைந்த விசாலமான மேல்மாடி வீடு விற்பனைக்கு அல்லது வாடகைக்குண்டு. தொடர்பு: T.P.No 01-507863.

(18416)

### விற்பனைக்கு

பஜாஜ் ரக ஸ்கூட்டர் மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.06, (பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.

(18392)

## வேம்பொடுகேணி பாடசாலைக்கு நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி,மே26

இத்தாவில் வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலையை அதன் சொந்த இடத்தில் மீள இயங்க வைக்க தற்காலிக வகுப்பறைத் தொகுதிகள் அமைக்க கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் அவரது புனர்வாழ்வு நிதியிலிருந்து 2 லட்சத்து 33 ஆயிரத்து 500 ரூபாவினை வழங்கியுள்ளார்.

வகுப்பறைக் கொட்டகை தற்போது பாடசாலை ஆரம்பப் பிரிவு இயங்கும் பாடசாலை மைதானத்தில் அமைக்கப்படவுள்ளதாகவும் -

எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் பாடசாலை இக்கட்டடத்தில் இயங்குமெனவும்-

பாடசாலை அதிபர் தி.இராமலிங்கம் தெரிவித்தார்.

தற்போது இப்பாடசாலை பளை அந்திராயர் தேவாலயத்திற்கு அருகில் உள்ள தற்காலிக கொட்டகையில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஓ-117)

## கரம்பன் கண்ணகி ஆலய உற்சவத்தின் காலத்தில் குடிதண்ணீர் பற்றாக்குறை

ஊர்காவற்றுறை,மே26

ஊர்காவற்றுறை கரம்பன் கண்ணகையம்மன் ஆலயத்தில் வருடாந்தம் வைகாசி மாதம் பிரதி சனிக்கிழமைகள் தோறும் நடைபெற்று வரும் வைகாசிப் பொங்கல் உற்சவம் ஆரம்பமாகியுள்ளது.

இந்த உற்சவ தினங்களில் ஆலயத்துக்கு வருவோர் குடிதண்ணீர் பற்றாக்குறையால் அவதியுற நேரிடுவதாகக் கூறப்படுகிறது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் திருவிழா நடைபெறும் நாள்களில் குடி தண்ணீர் வசதி செய்து தர வேண்டும் என பொதுமக்கள் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஓ-16)

## கொழும்புத்துறை சுவாமியார் வீதி குண்டும் குழியுமாக!

கொழும்புத்துறை,மே26

கொழும்புத்துறை, சுவாமியார் வீதி நீண்ட காலமாக புனரமைப்புச் செய்யப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், சென் போஸ்ட் வித்தியாலயம், புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி, வயோதிபர் சாலை என்பவற்றுக்கு இவ்வீதியே பிரதான போக்குவரத்து பாதையாக உள்ளது.


அதேவேளை -

வளன்புரம் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்து வருவதாலும் இவ்வீதியின் பாவனை அதிகரித்துள்ளது.

இவ்வீதியைச் செப்பனிட்டுத் தருமாறு ஏற்கனவே, இப்பகுதி மக்கள் யாழ். மாநகர சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-30)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



பூநாறிலேன், கொக்குவில் மேற்கைச் சேர்ந்த
**சதீஸன் ஜெயரூபி**
தம்பதிகளின் செல்வப் புதல்வன்

## நிவாஷன்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (26-05-2003) திங்கட்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார் கேதீஸ், ஜீவன், கண்ணா சித்தப்பா ரஜீவன், அத்தைமார் தர்சினி, தீபிகா, அம்மப்பா, அம்மம்மா, மாமா நிருபாலன், சித்திமார் கோவிதா, தர்சி மற்றும் உற்றார், உறவினர்கள் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்மன் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வென வாழ்த்துகிறார்கள்.

பூநாரிலேன், கொக்குவில் மேற்கு, கொக்குவில். (17398) தகவல்: சதீஸன்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



எமது உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி தர்மலிங்கம் தனலட்சுமியின் அன்புச் சகோதரன்

**தர்மலிங்கம் பரஞ்சோதி**

அவர்கள் (12. 04. 2003) அன்று அகால மரணமானார். அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதவி அரசாங்க அதிபர் பணிமனை, காரைநகர். (c/28089) முகாமையாளரும். சமுர்த்தி உத்தியோகத்தர்களும்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 26 - 04 - 1938



மறைவு 26 - 04 - 2003

## அமரர் கனகசபை அரசரத்தினம்

(பத்திரிகையாளர், அகில இலங்கை சமாதான நீதிவான்)

எமது அன்புத் தெய்வத்தின் பிரிவுச் செய்திகேட்டு இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் இரங்கல் செய்தி வெளியிட்டோருக்கும் தந்தி மூலம் துயர் பகிர்ந்து கொண்டோருக்கும் ஏனைய வழிகளில் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது மனமுவர்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (26.05.2003) திங்கட்கிழமை நடைபெறும் எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*57,அரசடி வீதி, யாழ்ப்பாணம்.* (18395) - குடும்பத்தினர்.


## ஜெனரேட்டர்கள்

உங்களது மின்சாரப் பிரச்சினையைத் தீர்க்க ஹொண்டா (HONDA) ஜெனரேட்டர்கள்.

650W, 1000W, 1200W, 1600W, 2600W

வீடுகள், காரியாலயங்கள், ரெஸ்டோரண்டுகள், கடைகள், மண்டபங்கள், டிஸ்பென்சறிகள், தோட்ட பங்களாக்கள்.......... இன்னும் பல!

உடனடி விற்பனைக்கு உண்டு.

கையிருப்பு சொற்பமே!

**GENERAL EQUIPMENTS LTD**

316, 400, Sri Sangaraja Mawatha, Colombo - 12
Tel: 345046, 327264, 343822, 430799, Fax: 434637

(C27825)


## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 09 - 06 - 1934



விண்ணில் 26 - 05 - 1994

### திருமதி திரவியம் திருநாவுக்கரசு

அன்னையே உமை இழந்து
ஒன்பது ஆண்டு சென்றாலும்
அழகான காவியமாய் - எம்
ஆழ்மனதில் வாழ்கின்றீர்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய வெல்வில் முருகனை வேண்டுகின்றோம்.

முருகமூர்த்தி வீதி, சங்கானை. (18401) கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



கடந்த 28.04.2003 திங்கட்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

### திருமதி முருகர் செல்லமுத்து

அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரணக் கிரியைகளும் 28.05.2003 புதன்கிழமை முற்பகல் அன்னாரது கண்டாவளை இல்லத்தில் நடைபெறும்.

அன்றைய தினம் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

மு.விநாயகேந்திரம் (மகன்)
மு.விக்னேஸ்வரன் (மகன்)
மு.யோகேஸ்வரன் (மகன்)
திருமதி தர்மரட்ணம் பாக்கியம் (மகள்)

*'செல்வபதி', கண்டாவளை.* (C/28044)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 14 - 02 - 1946



இறப்பு 27 - 04 - 2003

### திருமதி கந்தசாமி தவமணி

(குயிலம்மா)

அன்பிற்கும் பண்பிற்கும் பாசத்திற்கும் உறைவிடமாய்
இல்லத்தின் ஒளி விளக்காய் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
எமது நல்வாழ்விற்கு ஒளியேற்றி வைத்து - பிரான்ஸில்
இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தை
என்றும் எம்மனதில் இருத்தி வணங்குவோம்.

கடந்த 27.04.2003 இல் பிரான்ஸில் காலமான எமது அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் எமது இல்லத்தில் இன்று (26.05.2003) திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. அத்தருணம் எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பத்தமேனி, அச்சவேலி. (18396) திரு.திருமதி அருந்தவராசா ஜெயமலா (மகள்)

உதயன்

## எங்கிருந்து வந்தது இந்தத் துணிச்சல்?

"இறைமையுள்ள ஓர் அரசைப் பார்த்து அரசமைப்பை மீறிய இடைக்கால நிர்வாகம் ஒன்றை வழங்கும்படி கோருவதற்கு புலிகளுக்கு என்ன துணிச்சல்?"

- இப்படி இறுமாப்போடு கேட்டிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

அத்தகைய கோரிக்கை ஒன்றைப் பரிசீலிப்பது குறித்து அரசு கனவு காணும் என்று யாராவது நினைப்பார்களேயானால் அவர்கள் முட்டாள்களாகத்தான் இருப்பார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

யதார்த்தத்தைப் புரிந்து கொண்டவர்களை முட்டாள்கள் என்பதா அல்லது யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாதவர்களைத்தான் முட்டாள்கள் என்பதா என்பது ஜனாதிபதிக்கு புரியவில்லை என்றுதான் கருதவேண்டியிருக்கின்றது.

ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் இருந்தே புரையோடிப்போய்விட்ட இந்த இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வைக் காண்பதற்கு பல போராட்டங்களைத் தமிழர்கள் நடத்திவிட்டார்கள். பல தமிழ் தலைமைகள் வந்துபோய்விட்டன. அவற்றில் பலவும் காந்திகாட்டிய அஹிம்சை வழியில் தங்களின் நியாயமான உரிமைகளை வேண்டி நின்றன. அப்போது தட்டிக் கேட்கமுடியாத படைபலமும் ஆட்சிப்பலமும் இருந்ததால் சிங்களப் பேரினவாதம் தமிழர்களின் நியாயமான கோரிக்கையை செவிமடுக்கவில்லை. ஆயுத முனையிலேயே தமிழர்களின் உரிமைப்போர் அடக்கிஒடுக்கப்பட்டது.

ஆனால், இன்று நிலைமை அப்படியல்ல.

துணிச்சலும், தன்னிகரில்லாத் திறமையும், சுதந்திரவேட்கையும் கொண்ட ஒரு தலைவனின் வழி நடத்தலில் தமிழினம் ஆக்ரோஷத்தோடு கிளர்ந்தெழுந்து நிற்கிறது. படைப்பலத்துக்குப் பதிலடி கொடுத்து, தனிப்படை அமைத்து பலம்மிக்கதாய் வீறுகொண்டு எழுந்து நிற்பதால் அதற்குத் துணிச்சல்தானே வந்துள்ளது.

மறைந்திருந்து தாக்கும் கரந்தடிப்படையாக முளைவிட்ட தமிழர்களின் விடுதலைப் புலிகள் அணி, மரபுவழி இராணுவமாகப் பாணமித்தது. இந்த துணிச்சல் பற்றிய கேள்வியை எழுப்பிய ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில்தான் என்பது மறந்துவிடக் கூடியதொன்றல்ல.

ஜனாதிபதி சந்திரிகா குறிப்பிடும் இறைமையுள்ள அவரது அரசின் ஆள்புல நிர்வாகப் பிரதேசத்தில் ஒரு பகுதி - வடக்கு, கிழக்கில் - அதாவது, தமிழர் தாயகத்தில் பெரும் பரப்பு - அந்த அரசின் நிர்வாகத்தின்கீழ் இல்லை. அந்தப் பிரதேசத்தைப் புலிகளே நிர்வகிக்கிறார்கள். அங்கு புலிகளின் தனி இராணுவம், தனி பொலீஸ், சட்டம் - ஒழுங்கு மற்றும் தனியான நீதித்துறை, தனியான நிர்வாக முறைமைகள் இருக்கின்றன.

அதாவது, இலங்கை நாட்டுக்குள் - தனியாக -இலங்கை அரசுக்குப் புறம்பாக - மற்றொரு தேசிய இனத்துக்கான நிர்வாகக் கட்டமைப்பு முறைமை நடைமுறையில் உள்ளது.

ரணிலின் இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்கூட இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு அதன் அடிப்படையில்தான் உருவாக்கப்பட்டது என்பது அரசியல் அரிச்சுவடி புரிந்தவர்களுக்குக்கூட தெரிந்த விடயமாகும்.

ஒரு தனிநாட்டுக்கான கட்டமைப்பு தமிழர் தாயகத்தில் உருவாக்கப்பட்ட பின்னணியில்தான், பிரிந்து போகாமல் - புரிந்துணர்வு அடிப்படையில் - அமைதி வழியில் - சமாதான முறையில் - ஐக்கிய இலங்கைக்குள் - பிணக்கின்றி இணக்கத் தீர்வு காணும் முயற்சிக்கு முன்வந்திருக்கிறார்கள் புலிகள்.

இந்த யதார்த்தம் புரியாததால் - அல்லது புரிந்தும் புரியாதது போலக் காட்டிக்கொள்ள விரும்புவதால் - அதனைப் புரிந்தவர்களைப் பார்த்து முட்டாள்கள் என்று கூறமுனைகின்றார் அதிபுத்திசாலியான ஜனாதிபதி.

புலிகளின் பலத்தை - வலிமையை - யதார்த்தத்தில் புரிந்துகொண்டவர்கள், புலிகளின் இந்த நியாயமான கோரிக்கைக்கு அவர்களுக்கு எங்கிருந்து இந்தத் துணிச்சல் வந்தது என்ற கேள்வியை நிச்சயம் எழுப்பியிருக்கமாட்டார்கள்.

இத்தகைய கோரிக்கையை எழுப்பியுள்ள புலிகளுடன் தொடர்ந்தும் சமரசம்பேணி, அவர்களின் கோரிக்கையை இயன்றவரை நிறைவுசெய்ய அரசினர் முயல்வதும் -

கடற்புலிகளை தனிக் கடற்படையாக ஏற்கும்படி கண்காணிப்புக் குழுவினர் வற்புறுத்துவதும் -

புலகளின் பலத்தை - வலிமையை - துணிச்சலை இவர்கள் புரிந்துகொண்டதன் விளைவுதான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

புலிகளின் பலத்தைப் புரிந்தும் புரியாத மாதிரிப் பேசுகின்றார் ஜனாதிபதி. அதன் விளைவு விபரீதமாகி, பலம் பலாத்காரத்தினால் புரிய வைக்கப்படும் போது நிலைமை கையை மீறிவிட்டதாக அவர் அவஸ்தைப்பட நேர்ந்தாலும் நேரலாம்.

## பளையில் திணைக்களங்களை புனரமைக்க 7கோடி ரூபா ஒதுக்கீடு

தென்மராட்சி,மே26

பளைப்பிரதேசத்தில் யுத்தத்தினால் சேதமடைந்த அரச திணைக்களங்களைப் புனரமைக்க 7கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பளைப்பிரதேசச் செயலகத்துக்கு ஒரு கோடியே 78லட்சம் ரூபாவும், பளை அஞ்சல் அலுவலகத்துக்கு ஒரு கோடியே 70லட்சம் ரூபாவும், பளைப் பிரதேச சபைத் தலைமை அலுவலகத்துக்கு 70லட்சம் ரூபாவும், பளை மத்திய கல்லூரி, பளை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றின் கட்டடப் புனரமைப்புக்கும் கமநல சேவை நிலைய புனரமைப்புக்கும் 42லட்சம் ரூபாவும், குடிதண்ணீர் விநியோகத்துக்கு 26லட்சம் ரூபாவும், ஆயுர்வேத வைத்தியசாலைக்கு 20லட்சம் ரூபாவும் -

இயக்கச்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க 10லட்சம் ரூபாவும், முகாவில்குளம், அல்லிப்பளை அறத்திகுளம், முல்லையடி கிராய் குளம் ஆகியவை புனரமைக்க 70 லட்சம் ரூபாவும் - நிர்மாணச்செலவுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான நிதியினை கிளிநொச்சி அரச அதிபரின் அவசர புனர்வாழ்வு நிதியிலிருந்தும், நிகொட், நியாப், நீர்ப் (Neerp) ஆகிய நிறுவனங்களினாலும் வழங்கப்பட்டுள்ளது.

இவற்றை விட வேறு சில அரச சார்பற்ற நிறுவனங்களும் பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்து வேலைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)

### மாதர் மாண்மியம்

**பாசம் மிக்க மாதரசி**

குடித்து விட்டு தசிப்பை நாளும்
கூந்தலைப் பிடித்து இழுத்து
அடி உதை பலவும் தந்து
அயலவர் சிரிக்க வைப்பான்
படித்த அப்பட்ட தாரி
பசியுடன் கிடப்பான் என்று
மடியினில் கிடத்தி வைத்து
மாதரசி உணவு ஊட்டி
குடித்தவெறி முறியுமட்டும்
கூடத்தில் காவல் காப்பாள்
படிகடவா பத்தினி உன்
பாசத்தை நேரில் கண்டேன்
குடிமகன் தன்னைப் பேணும்
குலமகள் நீடு வாழ்க
அட இவள் வாசுகியை வென்ற
அற்புத ஆரணங்காமன்றோ

- விகடகவி.

### கடும் காற்றால் அழிவடைந்த

## வாழைத் தோட்டங்களுக்கு நிவாரணம் பெற்றுத் தருக!

### கோப்பாய் விவசாயிகள் கமநல ஆணையாளரிடம் கோரிக்கை

கோப்பாய்,மே26

கடும் புயல் காரணமாக முற்றாக அழிவடைந்த வாழைத் தோட்டங்களைப் பார்வையிட்டு அதற்கான உரிய நிவாரணம் கிடைக்க ஆவன செய்யுங்கள்.

- இவ்வாறு கோப்பாய் வடக்கு மத்தி விவசாய சம்மேளனம் யாழ.கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து மேற்படி சம்மேளனம் ஆணையாளருக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த 13ஆம் திகதி இரவு எமது பிரதேசத்தில் வீசிய பெரும் புயல் காரணமாக் ஏற்பட்ட பேரழிவில் எமது பகுதி விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைந்துள்ளனர்.

இந்தப் பேரழிவினால் மரங்கள் முறிந்தும், வீட்டுக் கூரைகள் தூக்கியெறியப்பட்டும் உள்ளன. இதனால், அல்லலுறும் மக்கள பலரும் தமது வருமானத்திற்குரிய வாழைத்தோட்டங்கள் புயலால் முற்றாக அழிவடைந்த நிலையில் எவ்வித வருமானமும் இன்றி நாளாந்த சீவியத்திற்கே கஷ்டப்படுகின்றனர்.

எனவே, இது விடயமாக மேற்படி அழிவுக்குள்ளான இடங்களைப் பார்வையிட்டு மேறகொண்டு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். - என்று அதில் உள்ளது. (எ-ரி-72)

## சிங்கள தேசியத்தை வலியுறுத்துவதே தென்னிலங்கைக் கட்சிகளின் இலட்சியம்!

### இதுவே யதார்த்தம் என்கிறார் வாசுதேவ நாணயக்கார

யாழ்ப்பாணம்,மே26

தென்னிலங்கையிலுள்ள கட்சிகள் காலத்துக்குக் காலம் பல மாற்றங்களைக் கொண்டவையாக இருந்தாலும்கூட அந்தக் கட்சிகள் அனைத்துமே சிங்கள தேசியப் போக்கை முன்நிறுத்த முயல்வதை நாம் யதார்த்தமாகக் காண்கிறோம்.

- இவ்வாறு தெரிவித்தார் ஜனநாய இடதுசாரி முன்னணியின் தேசிய அமைப்பாளர் வாசுதேவ நாணயக்கார.

நேற்றுமுன்தினம் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 'பாதுகாப்பு மற்றும் சமாதானம் குறித்த கூட்டு நடவடிக்கைகள்' என்ற தொனிப்பொருளிலான மக்கள் அரங்கத்தின் முதலாம் நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இன்று போர் நிறுத்தம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பது உண்மைதான். ஆனால், அதிலுள்ள பல்வேறு சரத்துக்கள் பூரணமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை நாம் காணமுடிகிறது.

இதற்காக இலங்கை அரசுக்கும் தென்னிலங்கையிலுள்ள பல்வேறு கட்சிகளுக்கும் நாம் பல அழுத்தங்களை கொடுக்க வேண்டியுள்ளது.

மீளக்குடியமர்வுப் பிரச்சினையை நாம் எடுத்துப் பார்க்கின்ற பொழுது, இந்த மீளக்குடியமர்வு சரியான முறையிலே அமுல்படுத்துவதாக இருந்தால் தமிழ் மக்கள் மீளக்குடியமர வேண்டிய பகுதிகளிலிருந்து இராணுவத்தினரை அப்புறப்படுத்த வேண்டியது இன்றியமையாததாக இருக்கின்றது.

இதனை சரியான முறையில் புரிந்து கொள்ளாமல் அல்லது இதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்யாமல் இந்தப் போர் நிறுத்தம் சரியான முறையில் அமுல்படுத்தப்படுகிறது என்று கூறமுடியாது.

எமது பிரச்சினையில் அமெரிக்காவின் தலையீடு குறித்து நாம் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். மத்தியஸ்தம் வகிப்பதற்கு எமக்கு அனுசரணையாளர்கள் தேவை என்பது உண்மைதான். ஆனால், அமெரிக்காவைப் பொறுத்தவரை அது எப்பொழுதும் தனது தேசிய நலனைத்தான் முதன்மைப்படுத்துகிறது.

தனது தேசிய நலனுக்காக உலகில் எந்தவொரு நாட்டுக்குள்ளும் ஊடுருவுவதற்கும் ஆக்கிரமிப்புச் செய்வதற்கும் அவர்கள் எப்போதும் தயாராகவே இருக்கின்றார்கள் என்பதை நாம் வரலாற்றிலிருந்து அறியக்கூடியதாக இருக்கின்றது.



அரசாங்கமாக இருந்தாலும் ஏனைய தென்னிலங்கை பேரினவாத சக்திகளாக இருந்தாலும் சரி, அவை அமெரிக்காவின் கூற்றுக்களை ஏற்று செயற்படுகின்றார்கள். இவற்றை நாம் கருத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

திம்பு அடிப்படைகளை வைத்துக்கொண்டுதான் எமது பரச்சினைகளை அணுகவேண்டும். ஆனால், திம்பு அடிப்படைகளை தென்னிலங்கையில் உள்ள கட்சிகள் எவ்வளவு தூரம் புரிந்து வைத்திருக்கின்றன என்பது சந்தேகத்துக்கிடமாகவே உள்ளது.

தாம் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைக்கவில்லை. ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் அதிகாரத்தை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் ஓர் இடைக்கால தீர்வுக்கு வரமுடியும் என்பதை விடுதலைப் புலிகள் ஆணித்தரமாக கூறியிருக்கின்றார்கள்.

இதனைக் கவனத்தில் கொள்ளவேண்டியது தென்னிலங்கையிலுள்ள அரசியல் சக்திகளின் தேவையாக இருக்கின்றது.

அதேசமயம், முஸ்லிம் மக்களுடைய அபிலாஷைகள் அவர்களின் தனித்துவம் என்பன பற்றிய பிரச்சினைகளும் பேச்சுக்களில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் அபிலாஷைகள் அவர்களது பிராந்தியம் என்பன முக்கியமாகக் கருத்தில் கொள்ளப்படவேண்டும். சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் முன்னரைவிட இப்போது பல முன்னேற்றங்களை அவர்களது செயற்பாடுகளில் இருந்து அறிந்து கொள்ளமுடிகிறது.

அதேவேளை -

தென்னிலங்கையிலுள்ள இனவாத சக்திகள் தமிழ் மக்களின் அபிலாஷைகளை முழுமையாக உணர்ந்து கொண்டவர்களாக காணமுடியவில்லை.

இந்தப் பிரச்சினை சம்பந்தமாக தென்னிலங்கையிலுள்ள ஊடகங்களும் எதிர்மறையான கருத்துக்களைத்தான் முன்னெடுத்துச் செல்கின்றன.

வடக்கு - கிழக்கை பொறுத்தவரை அங்கு சிங்களமொழி பேசுகின்ற இராணுவம், பொலீஸார் தங்கியிருக்கும்வரை அங்கு தமிழ்மக்கள் மீளக்குடியமர்வது சாத்தியமில்லை.

தமிழ் மக்களின் உரிமை தொடர்பாகவும் சமஷ்டி மூலமாக தீர்வு காண முடியும் என்ற கருத்தினையும் நாம் தென்னிலங்கை மக்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டிய அதேவேளை, தனியார் மயப்படுத்தல் மற்றும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி. என்பவற்றுக்கெதிராகவும் நாம் தொடர்ச்சியாக செயற்பட வேண்டியுள்ளது - என்றார். (எ-4)

### நாளை

வைகாசி 13
செவ்வாய்க்கிழமை
27.05.2003
திதி : துவாதசி
பின்னிரவு 4.29 வரை
நட்சத்திரம் : ரேவதி
பிற்பகல் 3.36 வரை
சுபநேரம் : 10.22 - 11.52
ராகுகாலம் : 2.52 -4.22
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

முடியாது என்று நீங்கள் நினைப்பதைத்தான் முடித்துக் காட்டியே தீரவேண்டும்.

முதலாவது

# பிறந்ததின வாழ்த்து

26.05.2003



பருத்தித்துறை, மந்திகையைச் சேர்ந்த
திரு.திருமதி ரமேஷன் - கோமதி
தம்பதிகளின் செல்வப் புதல்வன்

## செல்வன் றக்ஷன்

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (26.05.2003) திங்கட்கிழமை பருத்தித்துறை, மந்திகையில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை ஜேர்மனியிலுள்ள அப்பப்பா, அப்பம்மா, மாமிமார், சித்தப்பா, இலங்கையிலுள்ள அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் நலமுடன் வாழவேண்டும் என்று மனதார வாழ்த்துகின்றார்கள்.

மந்திகை. (18366) - அம்மப்பா, மாமாமார்.


## பச்சிலைப் பள்ளியில் முன்பள்ளி திறப்பு

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகத்தினால் இத்தாவிலில அமைக்கப்பட்ட ரஞ்சித் முன்பள்ளி தளபதி அறிவனால் திறந்து வைக்கப்பட்டது. தேசியக் கொடியினை களமுனைத் தளபதி முகுந்தன் ஏற்றி வைக்க மாவீரர் ரஞ்சித்தின் பெற்றோரினால் முன்பள்ளிப் பெயர்ப் பலகை திரை நீக்கம் செய்யப்பட்டது.(எ-3-117)


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி,
தலைகால் அவியல்,
சருமநோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல், மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
சி.இராசரத்தினம்
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் : 2459
(7815)


# 22ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
கலாநிதி ஆ.தியாகராசா
எம்.ஏ.எம்.லிட்
(முன்னாள் கல்லூரி அதிபரும்
நாடாளுமன்ற உறுப்பினரும்)



தோற்றம் 17.04.1916 மறைவு 25.05.1981

காரையன்னை ஈன்றெடுத்த எங்கள் கோவே!
காலமெல்லாம் கலை ஞானம் உணர்த்துவாயே
சீரையெல்லாம் மானியற்கு ஆற்றுவாயே
சிறப்புடனே செம்மை வழிகாட்டுவாயே
பேரையெல்லாம் நிலைநாட்ட எங்கள் நம்பி
பிழையின்றி நாளெல்லாம் தொண்டு செய்தாய்
ஊரையெல்லாம் பலவழியில் உயற்றுதற்காய்
ஓய்வின்றி உழைத்த நின்றன் புகழ்வாழி! வாழி!!

யா/கலாநிதி ஆ.தியாகராசா
ம.ம.வித்தியாலயம்,
காரைநகர்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்
அபிவிருத்திச் சங்கம்.

(சி-28060)


# மூன்றாவது பிறந்ததின வாழ்த்து



நெல்லியடி, கரவெட்டியைச் சேர்ந்த
திரு.திருமதி சந்திரலிங்கம் - தயாநிதி
தம்பதிகளின்
செல்வப் புதல்வன்

## லக்ஷன் (கபில்)

தனது மூன்றாவது பிறந்ததினத்தை இன்று (26.05.2003) திங்கட்கிழமை நெல்லியடி, கரவெட்டியிலுள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, தங்கையார், தம்பி, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, லண்டனிலுள்ள அம்மப்பா, பெரியம்மா, மாமா மற்றும் சித்தப்பாமார், அத்தையார் ஆகியோர் சீருஞ்சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்க வாழ்க என வாழ்த்தி ஞானவைரவப் பெருமானின் அருள்பெற்று வாழ பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ நாரதா வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.
(18354)

திரு.வ.சந்திரராசா
(அப்பப்பா),
குடும்பத்தினர்.



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில் 1981 - 09 - 16



ஆண்டவன் அடியில் 2003 - 04 - 26

## செல்வி சங்கீதா செல்வலிங்கம்

இன்று (2003.05.26) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன், அவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு எமக்கு சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மகாத்மா வீதி,
ஐயனார் கோயிலடி,
நெல்லியடி, கரவெட்டி.

- திரு.திருமதி சி.செல்வலிங்கம்
குடும்பத்தினர். (18340)


# பிரதம பொறியியலாளர் அலுவலகம்
# கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) கிளிநொச்சி

1. கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கிளிநொச்சி கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலக கேள்விச் சபையால் 2003ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிவரை முரசுமோட்டையில் உள்ள கிளிநொச்சி கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தினால் அலுவலக நேரத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாக எமது அலுவலகத்தினால் திறக்கப்படும். கேள்வி கோருபவர் அல்லது அவரால் முறைப்படி அங்கீகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் கேள்விகள் திறக்கப்படும்போது சமுகமளிக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.
2. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்குக் கீழே குறிக்கப்படும் தரவுகளையுடைய அல்லது அதற்கு மேற்பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப்பத்திரங்கள் கோருவதற்கு தகுதியுடையவராவர்.
3. ஒப்பந்தப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப்புத்தகத்தை முரசுமோட்டையில் உள்ள கிளிநொச்சி கட்டட திணைக்கள பிரதம பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப் பணத்தை முரசுமோட்டையில் உள்ள கிளிநொச்சி கட்டடத் திணைக்கள (மாகாணம்)பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கேள்விப் பத்திரங்களை 2003ஆம் ஆண்டு ஜூன் மாதம் 02ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிவரை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சியில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | பதிவுசெய்யும் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01. ஆரம்ப சுகாதார நிலையம் ஆலங்கேணி, பூநகரி | எம்-9 | 3255/- | 500/- |
| 02. ஆரம்ப சுகாதார நிலையம் இராமநாதபுரம், கரைச்சி | எம்-9 | 3255/- | 500/- |
| 03. ஆரம்ப சுகாதார நிலையம் உதயநகர் மேற்கு கரைச்சி | எம்-9 | 3255/- | 500/- |
| 04. ஆரம்ப சுகாதார நிலையம் 4ஆவது மைல் கல் , பூநகரி | எம்-9 | 3255/- | 500/- |
| 05. ஆரம்ப சுகாதார நிலையம் கனகாம்பிகைக்குளம், கரைச்சி | எம்-9 | 3255/- | 500/- |
| 06. ஆரம்ப சுகாதார நிலையமும் மருத்துவ மாது விடுதியும் இயக்கச்சி, பளை | எம்-8 | 13450/- | 750/- |
| 07. ஆரம்ப சுகாதார நிலையமும் மருத்துவ மாது விடுதியும் புளியம்பொக்கணை, கண்டாவளை | எம்-8 | 13450/- | 750/- |
| 08. ஆரம்ப சுகாதார நிலையமும் மருத்துவ மாது விடுதியும் ஆனைவிழுந்தான், கரைச்சி | எம்-8 | 13450/- | 750/- |
| 09. ஆரம்ப சுகாதார நிலையமும் மருத்துவ மாது விடுதியும் பள்ளிக்குடா, பூநகரி | எம்-8 | 13450/- | 750/- |
| 10. ஆரம்ப சுகாதார நிலையமும் மருத்துவ மாது விடுதியும் கௌதாரிமுனை, பூநகரி | எம்-8 | 13450/- | 750/- |

5. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு வேலைக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டுமே விநியோகிக்கப்படும்.
6. கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம். மேலதிக விவரங்களை கிளிநொச்சி கட்டடத் திணைக்களம் (மாகாணம்) நிறைவேற்று எந்திரியிடமிருந்து வேலை நாள்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

எந்திரி ந.சுந்தரமூர்த்தி,
பிரதம பொறியியலாளர்,
கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்),
கிளிநொச்சி.

(சி-28063)

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

## தனுசு

சனிபகவான் இது வரை உங்கள் ராசிக்கு 6ஆம் இடத்தில் இருந்து பல்வேறு நன்மைகளைத் தந்தார். நல்ல பணப்புழக்கத்தையும், எடுத்த காரியத்தில் வெற்றியையும் கொடுத்திருப்பார். சனியோடு ராகுவும் இணைந்திருந்து பல நன்மைகளை தந்திருப்பார். கேது 12ஆம் இடத்தில் இருந்து பொருள் விரயத்தை உருவாக்கி இருப்பார். உடல் உபாதைகளையும் தந்திருப்பார். குருபகவான் 8ஆம் இடத்தில் இருப்பதால் வீண் விரோதம் வந்திருக்கும். மனதில் வீண்மனக் கவலையை கொடுத்திருப்பார். ஆனாலும் சனியின் பலத்தால் நன்மைகள் அதிகமாகவே நடந்திருக்கும். இந்த நிலையில் சனி 7ஆம் இடத்திற்கு செல்கிறார்.

இது சிறப்பான இடம் அல்ல. அவரால் முன்பு போல் நற்பலனை தர முடியாது. பொதுவாக இந்த இடத்தில் இருக்கும்போது சனி குடும்பத்தில் பல்வேறு பிரச்சினையை உருவாக்குவார். அலைச்சல் அதிகரிக்கும். வெளியூர் வாசம் நிகழும். தீயோர் சேர்க்கையால் அவதியுறுவர். சனி சாதகமாக இல்லாவிட்டாலும் மற்றைய கிரகங்கள் அவ்வப்போது நன்மை தருவார்கள். அதோடு கெடுபலன் தரும் கிரகங்கள் வேதையில் சிக்கிக்கொண்டால் அவர்களால் தீமைகளை தரமுடியாது. இதனாலும் உங்களுக்கு கெடு பலன்கள் குறைய வாய்ப்பு உண்டு. அந்த வகையில் பலன்களை இங்கே காணலாம். பொதுவாக எடுத்த காரியம் வெற்றிகரமாக நிறைவேறும். பணப்புழக்கம் தொடர்ந்து சிறப்பாகவே இருக்கும்.

தேவைகள் பூர்த்தியாகும். வீண் விரயங்கள் 2003 ஜூலைக்கு பிறகு இருக்காது. வழக்கு விவகாரங்கள் திருப்திகரமாக இருக்கும். தீர்ப்புகள் பெரும்பாலும் சாதகமாக அமையும். ஆனாலும் புதிய வழக்கு எதிலும் சிக்கவேண்டாம். 2005ஆம் ஆண்டு பெப்ரவரிக்கு பிறகு எதிர்பார்த்த பணப் புழக்கம் இருக்காது. அப்போது எதையும் சிரத்தை எடுத்தே முடிக்க வேண்டியிருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். 2003 ஜூலைக்கு பிறகு குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடக்கும். தடைப்பட்டு வந்த திருமணம் 2004 ஒகஸ்டுக்குள் நடக்க வாய்ப்பு உண்டு. சிலர் புதிய வீடு வாங்குவர். 2003 ஜூலைக்கு பிறகு தம்பதியினரிடையே மனக்கசப்புகள் வரலாம். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போகவும்.

இந்தப் பிரச்சினை 2005ஆம் ஆண்டில் தீர்ந்துவிடும். பிரிந்திருந்த குடும்பம் ஒன்று சேரும். உத்தியோகத்தர்கள் திருப்திகரமான நிலையில் இருப்பர். தொடக்க காலத்தில் வேலைப்பளு அதிகமாகவே இருக்கும். 2003 ஜூலைக்கு பிறகு 2004 ஓகஸ்ட் வரை சிறப்பான பலனைப் பெறலாம். 2004ஆம் ஆண்டு ஓகஸ்டுக்கு பிறகு சுமாரான நிலைதான் இருக்கும். வியாபாரம் சனியின் இடமாற்றத்தால் தொய்வு நிலை ஏற்படாது. பணப்புழக்கம் அதிகரிக்கும். 2003 ஜூலைக்கு பிறகு 2004 ஓகஸ்ட் வரை அதிக முன்னேற்றம் இருக்கும். 2003 ஜூலைக்கு பிறகு 2004 ஓகஸ்ட் வரை சிறப்பாக இருக்கும். புகழ், பாராட்டு கிடைக்கும். மாணவர்கள் இந்த ஆண்டு அதிக முயற்சி எடுத்து படிக்க வேண்டியிருக்கும். 2003 ஜூலைக்கு பிறகு சிறப்பான நிலையை பெறலாம். 2005 பெப்ரவரிக்கு பிறகு சற்று சிரத்தை எடுத்துப் படிப்பது நல்லது. ஆசிரியரின் ஆலோசனை கிடைக்கும். உடல் நலம் சிறப்பாக இருக்கும். கேதுவால் இருந்து வரும் பித்தம் மயக்கம் போன்ற உபாதைகள் 2003 ஜூலைக்கு பிறகு குணம் ஆகும். 2005 பெப்ரவரிக்கு பிறகு உஷ்ணம் தொடர்பான பிரச்சினை வரலாம்.

2003 மே முதல் 2003 ஜூலை வரை இந்த காலக்கட்டத்தில் ராகு மட்டும் சாதகமாக நின்று நன்மைகளைக் கொடுப்பார். சனி சாதகமற்ற இடத்தில் இருந்தாலும் அவருக்கு வேதையாக குரு இருக்கிறார். இதனால் இந்தக் காலகட்டத்தில் சனியால் உங்களுக்கு எந்த இடையூறும் வராது. குருவின் 7ஆம் இடத்துப்பார்வையால் உங்களுக்கு வரும். எந்த பிரச்சினையையும் சாதுரியமாக முறியடிப்பீர்கள். பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும். செலவு அதிகரிக்க வாய்ப்பு உண்டு. உத்தியோகம் பார்ப்பவர்கள் அதிக வேலைப்பளுவை சுமக்க வேண்டியிருக்கும். அலைச்சல் இருக்கும். முயற்சி எடுத்தால்தான் கோரிக்கைகள் நிறைவேறும். மேல் அதிகாரிகளிடம் அனுசரித்து போகவும். வியாபாரம் தொய்வின்றி நடக்கும். பழைய காலம் போல் லாபம் அதிகமாக கிடைக்கும் என்று கருதவேண்டாம். ஆனாலும் தேவைக்கு குறையாது வரும்.

### 2003 ஒகஸ்ட் முதல் 2004 ஒகஸ்ட் வரை

குரு சாத்கமான இடத்திற்கு வருகிறார். ராகு 6இல் இருந்து 5ஆம் இடத்திற்கு வருகிறார்.இது சுமாரான நிலையே. ஆனால் கேது 12ஆம் இடத்தில் இருந்து 11 ஆவது இடத்திற்கு வருவது சிறப்பான பலனைத் தரும். ராகு திருப்தியற்ற நிலையில் இருந்தாலும் அவருக்கு வேதையாக கேது இருப்பதால் அவரால் கெடு பலனை செய்யமுடியாது. சனியால் வரும் கெடு பலனை எளிதில் முறியடிப்பீர்கள். எந்தக் காரியமும் தடையின்றி வெற்றிகரமாக நிறைவேறும். பொருளாதார வளம் மேலும் அதிகரிக்கும். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடக்கும். உத்தியோகம் பார்ப்பவர்கள் உயரும் நிலையில் இருப்பர். வேலையின்றி இருப்பவர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு உண்டு. வியாபாரம் கடந்த காலத்தை விட வளர்ச்சி காணும். புதிய தொழில் அனுகூலத்தை கொடுக்கும். ஆசிரியர், வக்கீல், பத்திரிகை தொழில் சிறப்பை தரும்.

### 2004 செப்ரெம்பர் முதல் 2005 ஜனவரி வரை

குரு சாதகமற்ற இடத்திற்கு செல்கிறார். அதாவது அவர் 10ஆம் இடம் வந்தாலும் அவரது 5ஆம் இடத்து பார்வை உங்களுக்கு வரும். எந்த பிரச்சினையையும் முறியடிக்கும் வல்லமையை தரும். மேலும் கேதுவின் நன்மையும் தொடரும். அதோடு ராகு வேதையில் சிக்கி இருப்பதால் எந்த கெடு பலனையும் தர மாட்டார். அந்த வகையில் இந்தக் காலமும் சிறப்பானதாக அமையும். பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும். தேவைகள் பூர்த்தியாகும். செலவு அதிகரிக்கும். சிக்கனமாக இருக்கவேண்டும். குடும்பத்தில் வசதிகள் சிறப்பாக இருக்கும். சிலர் தற்காலிகமாக குடும்பத்தை விட்டுப் பிரியவேண்டியிருக்கும். எனவே எதிலும் விட்டுக்கொடுத்து போகவும். உத்தியோகம் பார்ப்பவர்கள் பழைய நிலையை காண முடியாது. வியாபாரிகள் பொருளாதார வளத்தில் சிறப்பாக இருப்பர். ஆனால் அதிகமாக உழைக்க வேண்டும். வழக்கு விவகாரங்கள் சிறப்பாக இருக்கும்.

### 2005 பெப்ரவரி முதல் 2005 ஜூன் வரை

சுமாரான காலம். கேது 11ஆம் இடத்தில் இருந்து 12ஆம் இடத்திற்கு செல்கிறார். இது சுமாரான நிலை. ராகு 5இல் இருந்து 4ஆம் வீட்டிற்கு வருகிறார். இதனால் முக்கிய கிரகங்கள் எதுவும் சாதகமாக இல்லை. ஆனால் கேதுவுக்கு வேதையாக குரு இருப்பதால் கேதுவால் கெடுபலனை கொடுக்க முடியாது. மேலும் குருவின் 5ஆம் இடத்தின் பார்வை உங்கள் பிரச்சினையை எளிதில் முறியடிப்பார். குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு குறை இருக்காது. தம்பதியினரிடையே பிணக்குகள் மறைந்து ஒற்றுமை ஏற்படும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். உத்தியோகம் பார்ப்பவர்கள் சீரான நிலையில் இருப்பர். வேலையில் அதிக பளுவும் அலைச்சலும் இருக்கும். வியாபாரிகள் அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும்.

பித்தம், உஷ்ணம் தொடர்பான உபாதைகள் வரலாம். தாயின் உடல் நலனிலும் அக்கறை காட்ட வேண்டியிருக்கும்.

## மகரம்

உன்னதமான நேரம். சனி பகவான் இதுவரை 5ஆம் இடத்தில் இருந்து பல்வேறு இடையூறையும் இன்னலையும் கொடுத்து வந்தார். குடும்பத்தில் பல்வேறு பிரச்சினை வந்திருக் கும். கருத்து வேறுபாடு காரணமாக கணவன் மனைவி இடையே பிரிவு ஏற்பட்டு இருக்கும். அவரது கெடு பலனுக்கு ராகுவும் உறுதுணையாக இருந்திருப்பார். இந்த நிலையில்தான் இப்போது சனி பகவான் உங் கள் ராசிக்கு 6ஆம் இடத்துக்கு செல்கிறார். இது சிறப்பான இடம். இதுவரை சனியால் வந்த கெடு பலன் இனி நிகழாது. குறிப்பாக குடும்ப பிரச்சினை அறவே நீங்கும். உங்கள் ஆற்றல் அதிகரிக்கும். பகைவர்களின் சதியை முறியடிப்பீர்கள். மேலும் குரு மற்றும் கேதுவின் நன்மைகளும் தொடரும்.

இடையிடையே திருப்தியற்ற இடத்திற்கு சென்றாலும் பாதகம் ஏற்படாது. ராகு தொடக்க காலத்தில் சுமாரான நிலையில் இருந்தாலும் பிற்காலத்தில் நன்மை தருவார். நினைத்த காரியம் வெற்றிகரமாக முடியும். அதற்கு சனியும், கேதுவும் மிகவும் உறுதுணையாக இருப்பார்கள். பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். தேவைகள் பூர்த்தி ஆகும். 2003 ஜூலைக்குப் பிறகு அதிக பணச்செலவு ஏற்படும். மதிப்பு மரியாதை சிறப்பாக இருக்கும். பின்னர் 2004 ஓகஸ்டுக்கு பிறகு நிலைமை சீராகும். புதிய இடம், வீடு வாங்கலாம். புதிய வாகனம் வாங்க வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பிரிந்த குடும்பம் ஒன்றுசேரும். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சி கைகூடும். 2003 ஜூலைக்கு பிறகு சிலர் குடும்பத்தை விட்டு வெளியூர் மாறும் நிலை ஏற்படும்.

ஆனால் 2004 ஓகஸ்டுக்கு பிறகு மீண்டும் குதூகலம் ஏற்படும். தடைப்பட்டு வந்த திருமணம் நடக்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். 2005ஆம் ஆண்டு நிலைமை மேலும் மேம்படும். உத்தியோகத்தில் தொடக்க காலத்தில் சிறப்பான நிலையில் இருப்பர். 2003 ஜூலைக்கு பிறகு வேலைப்பளு அதிகரிக்கும். 2004 ஓகஸ்டுக்கு பிறகு நிலைமை சீராக இருக்கும். மீண்டும் கோரிக்கைகள் நிறைவேறும். வியாபாரிகள் கடந்த காலம் இருந்த பிற்போக்கான நிலை மாறும். நஷ்டம் தவிர்க்கப்படும். சேமிப்பு அதிகரிக்கும். வேலை இன்றி இருப்பவர்கள் புதிய தொழில் தொடங்கலாம். அரசிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். 2003 ஜூலைக்கு பிறகு 2004 ஓகஸ்ட் வரை பணவிரயம் அதிகம் இருக்கும். எதிரிகளின் இடையூறு வரலாம்.

அவர்கள் 2004 ஓகஸ்டுக்கு பிறகு லாபம் அதிகரிக்கும். கலைஞர்களுக்கு புகழ் பாராட்டு கிடைக்கும். 2003 ஜூலை முதல் ஆகஸ்டு வரை மட்டும் சற்று கவனமாக இருக்கவேண்டும். மாணவர்களுக்கு இந்த கல்வி ஆண்டு சிறப்பாக இருக்கும். 2003/2004 கல்வி ஆண்டு சுமாராக இருக்கும். அதிக சிரத்தை எடுத்து படிக்க வேண்டியிருக்கும். 2004/2005 கல்வி ஆண்டு சிறப்பான காலமாக இருக்கும். விரும்பிய பாடம் கிடைக்கும். சிலர் வெளிநாடு சென்று படிக்க வாய்ப்பு கிடைக்கும். விவசாயத்தில் அதிக அறுவடை வரும், கால்நடை செல்வம் பெருகும். புதிய சொத்து வாங்கலாம். வழக்கு விவகாரங்கள் சிறப்பாக இருக்கும். கைவிட்டு போன பொருள்கள் மீண்டும் கிடைக்க வாய்ப்புண்டு. உடல்நலம் சிறப்படையும். 2003 ஜூலைக்கு பிறகு கேதுவால் உஷ்ணம் தொடர்பான உபாதைகள் வரலாம். 2005ஆம் ஆண்டு உடல் நலம் பூரண குணம் ஆகும்.

### 2003 மே முதல் 2003 ஜூலைவரை

சிறப்பான காலமாக இருக்கும். சனி 6ஆம் இடத்திற்கு வந்துவிட்டதால் குடும்பத்தில் மனைவி வகையில் இருந்த பிரச்சினை மறையும். மகிழ்ச்சியும் ஆனந்தமும் நிலவும். புதிய வீடு வாங்கும் எண்ணம் இந்த காலக்கட்டத்தில் நிறைவேறும். வாகன சுகம் கிடைக்கும். பொருளாதார வளம் சிறப்படையும். தேவைகள் பூர்த்தியாகும். நினைத்ததை செய்து முடிக்கலாம். உத்தியோகம் பார்ப்பவர்கள் வேலையில் திருப்தி காண்பர். பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரம் சிறப்பாக இருக்கும். வீண் செலவு இருக்காது. புதிய வியாபாரம் அனுகூலத்தை கொடுக்கும். கலைஞர்களுக்கு புகழ், பாராட்டு வரும். சிலர் அரசிடம் இருந்து விருது கிடைக்க பெறலாம். மாணவர்கள் சிறப்பான முன்னேற்றம் காண்பர். விவசாயம் எதிர்பார்த்த வருமானத்தை காணலாம். புதிய சொத்து வாங்கலாம்.

### 2003 ஓகஸ்ட் முதல் 2004 ஓகஸ்ட் வரை

குரு சாதகமற்ற இடத்திற்கு சென்றுவிட்டார். அவரால் பழைய பலனை கொடுக்க முடியாது. அதே போல் 11ஆம் இடத்தில் இருந்து நன்மை தந்து கொண்டிருந்த கேதுவும் இனி 10ஆம் இடத்திற்கு வந்து நற்பலனை கொடுக்க முடியாதவராகிறார். ராகு 5ஆம் இடத்தில் இருந்து 4ஆம் இடத்திற்கு வருகிறார். இதுவும் சிறப்பான நிலை. ஆனால் சனியின் பலன்கள் மட்டும் தொடரும். குரு சாதகமற்ற இடத்தில் இருந்தாலும் அவரது 7ஆம் இடத்து பார்வை சிறப்பாக அதிக சிரத்தை எடுத்தே முடிக்க வேண்டியிருக்கும். தடைகள் அவ்வப்போது குறுக்கிடலாம். பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும்.

தேவைகள் பூர்த்தியாகும். செலவு அதிகரிக்கும். சிக்கனமாக இருக்கவேண்டும். உத்தியோகம் பார்ப்பவர்கள் சுமாரான நிலையில் இருப்பர். வேலைப் பளு அதிகமாகவே இருக்கும். வியாபாரிகள் அதிகமாக உழைக்க வேண்டும். தடைகள் அவ்வப்போது வரலாம். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தம் கிடைப்பது அரிது. வழக்கு விவகாரங்கள் சுமாராக இருக்கும். எந்த வழக்கிலும் சிக்க வேண்டாம். கேது சாதகமற்ற நிலையில் இருப்பதால் உஷ்ணம், பித்தம் போன்ற உபாதைகள் வரலாம்.

### 2004 செப்ரெம்பர் முதல் 2005 ஜனவரி வரை

நற்பலன்கள் கூடும். குரு சாதகமான இடத்திற்கு வந்துள்ளதால் மேலும் சனியின் நன்மைகளும் தொடரும். ராகுவும் கேதுவும் சாதகமற்ற இடத்தில் இருந்தாலும் பாதகம் இல்லை. பொருளாதார விரயம் இனி இருக்காது. காரிய அனுகூலம் கிடைக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். தடைப்பட்டு வந்த திருமணம் நடக்கும். சிறந்த வரனாக அது அமையும். சிலர் புதிய வீடு வாங்குவர். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு சிறப்பான நிலை நீடிக்கும். பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். வியாபாரிகள் நல்ல லாபம் கிடைக்கப் பெறுவர். எதிரிகள் வகையில் சிறு சிறு தடைகள் வரலாம். அவர்கள் வகையில் சற்று எச்சரிக்கையுடன் இருக்கவும். கேதுவால் பித்தம் உஷ்ணம் தொடர்பான உபாதைகள் வரலாம்.

### 2005 பெப்ரவரி முதல் 2005 ஜூன் வரை

குதூகலமான காலமாக இருக்கும் இதை பொற்காலம் என்றே சொல்லலாம். காரணம் ராகு சாதகமான இடத்திற்கு வந்திருக்கிறார். கேது 10ஆம் இடத்தில் இருந்து 9ஆம் இடத்திற்கு செல்வது அவ்வளவு சிறப்பான இடம் அல்ல. ஆனால் குரு, சனி ஆகியோரின் நற்பலன்கள் தொடரும். கேது சாதகமற்ற நிலையில் இருந்தாலும் அவருக்கு வேதையாக சனி உள்ளார். எனவே கேதுவால் கெடு பலன்கள் நடக்காது. இதுவரை உங்கள் முயற்சியில் இருந்து வந்த தடைகள் அனைத்தும் விலகும். காரிய அனுகூலம் எளிதாகும். பணப்புழக்கம் கூடுதலாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்து வரும் சிறு சிறு பிரச்சினைகூட அகலும். கணவன்மனைவி இடையே அன்பு மேம்படும். குழந்தை பாக்கியம் பெறுவர். உத்தியோகம் பார்ப்பவர்கள் சிறந்த பலனை காணலாம். மேல் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

கோரிக்கைகள் நிறைவேறும். புதிய வியாபாரம் முன்னேற்றத்தை தரும். வேலையின்றி இருப்பவர்கள் புதிய தொழில் தொடங்கலாம். அரசிடம் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கலைஞர்கள் புதிய ஒப்பந்தம் கிடைக்கப் பெறுவர். மாணவர்கள் அதிகமாக முன்னேற்றத்தை காண்பர். உடல் நலம் சிறப்படையும்.

(வளரும்)

## PHARMACIST (EXTERNAL) EXAM COURSE

வகுப்புகள் நாளை 27.05.2003 செவ்வாய்க்கிழமை
காலை 9.00 மணிக்கு தொடங்கவுள்ளது.
மேலதிக விவரம் பெறவிரும்புவோரும் இதேநேரம் சமுகந்தரலாம்.
சாயிராம் பார்மசி கல்வி, பட்டப்படிப்புகள் கல்லூரி,
57/13, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(18420)


## மிதிவெடி விழிப்புணர்வுக் கண்காட்சி

சிறுவர் பாதுகாப்பு - இலங்கை, யுனிசெவ் ஆகியவற்றின்
அனுசரணையுடன் சிறுவர் கழகங்களின் இணையம் நடத்தும்

### "மிதிவெடி விழிப்புணர்வுக் கண்காட்சி"

| காலம் | | இடம் |
|---|---|---|
| 26, 27.05.2003 | - | சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| 29, 30.05.2003 | - | கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம் |

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**
**அனுமதி:- இலவசம்**

☞ இன்று 26.05.2003 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு கண்காட்சி ஆரம்ப வைபவம் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து தினமும் காலை 9.00 - 5.00 மணிவரை மக்கள் பார்வையிடலாம்

தென்மராட்சி பாடசாலை மாணவர்கள் உட்பட அனைத்துப் பாடசாலை மாணவர்களும் இந்நிகழ்வில் பங்குபற்றுவதற்கு வேண்டிய ஒத்துழைப்பினை வழங்கி உதவுமாறு கல்விசார் அலுவலர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

- சிறுவர் கழகங்களின் இணையம்.
(சி-28077)

## மனம் நெகிழ்ந்து.....

எமது பாடசாலையின் பகுதித் தலைவரும் மூத்த ஆசிரியையுமான
திருமதி சி.ஜெயலட்சுமி அவர்களின் பாசமிகு கணவர்
**V.K.சிவானந்தன்** அவர்களின்
*(பிரதி அதிபர், யா/நெல்லியடி ம.ம.வி.)*
பிரிவுத்துயரில் துடித்துப்போய் நிற்கும் குடும்பத்தினரின்
துயரில் பங்கேற்பதுடன் அவர்களுக்கு
எமது அனுதாபங்களையும் தெரிவிக்கிறோம். அவரின் ஆத்மா நற்கதி
அடைய இறைவனைப் பிரார்த்தித்து அன்னாருக்கு எமது கண்ணீர்
அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

யா/ஞானாசாரியார் கல்லூரி
அதிபர், ஆசிரியர், ஊழியர், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
(C/28074)

## கண்ணீர் அஞ்சலி

### V.K.சிவானந்தன் (S.L.P.S. 2-I)
*(பிரதி அதிபர், யா/நெல்லியடி ம.ம.வி.)*

எமது பாடசாலையின் முன்னாள் அதிபர்
**V.K. சிவானந்தன்** அவர்கள் 23-05-2003 இல்
மரணமடைந்த செய்திகேட்டு எமது பாடசாலை
ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் மனம் கலங்கி நிற்கின்றோம்.
அவரது பிரிவுத் துயரால் வாடிநிற்கும்
அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கேற்பதுடன்
எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.
அவரின் ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டிக்கொண்டு
எமது கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.
**யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய**
**ஆசிரியர்கள், மாணவர்கள்.**
(C/28073)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆய்வுகூட உதவியாளர்
திரு.த.வசந்தகுமார் அவர்களின் வாழ்க்கைத்துணைவி
**திருமதி மேகலா வசந்தகுமார்**
அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்து கொள்வதோடு, கண்ணீர் அஞ்சலியைக்
காணிக்கையாகச் சமர்ப்பித்து
அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*யா/வைத்தீஸ்வராக் கல்லூரி,*
*யாழ்ப்பாணம்.*
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.
(18419)


## இடமாற்றத்துடன் மேலும் சலுகைகள்

*சொலெக்ஸ் மூக்குக்கண்ணாடியகமும்*
*லக்ஷறி பல் கட்டும் நிலையமும்*

**ஆம்**

☆ உங்கள் கண்களைப் பரிசோதித்து அழகிய பிறேம்களில் கண்ணாடிகளைப் பொருத்திப் பெற்றுக்கொள்ளவும் -
☆ முத்துப்போன்ற சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும் -
☆ காலநிலைக்கேற்ப கவர்ச்சிகரமான சண் கிளாஸ் வகைகளிற்கும், மாபிள் கண்களுக்கும் -
☆ மிதப்புப் பற்களிற்கு இலகு முறையில் கிளிப் செய்து பெற்றுக்கொள்ளவும் -

**Solax optical & Luxury Dental Works**

மேலும்
**சொலெக்ஸின் பவர் செல் போன்**

எந்தப் பிரதேசத்திலிருந்தும் தொடர்புகொள்ளக் கூடிய மேசைத் தொலைபேசிகளைப் பொருத்திக்கொள்ளவும் செல் போன், அதற்குரிய சிம்காட், காட்வகைகளையும் பெற்றுக் கொள்ளவும் சாவகச்சேரியில் ஒரேயொரு ஸ்தாபனம்:

**சொலெக்ஸ் பவர் செலூலர்**

கண்டி வீதி, சாவகச்சேரி சந்தி,
சாவகச்சேரி
(நவீன சந்தைக் கட்டடம் முன்பாக).
(சி-28080)


## கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்

### V.K.சிவானந்தன்
உபஅதிபர், யா/நெல்லியடி ம.ம. வித்தியாலயம்

எமது பாடசாலையில் நீண்ட நாள் ஆசிரியராய், பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொருளாளராய் கடமையாற்றி மீண்டும் உபஅதிபராய் சேவையாற்ற வந்தகாலை எம்மை விட்டுப்பிரிந்த அன்னாருக்கு எமது இதய அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி பிரிவால் துயருறும் குடும்பத்தாரின் சோகத்தில் நாமும் கலந்துகொள்கின்றோம்.

பெறுக ஆத்ம சாந்தி!

*யா/நெல்லியடி ம.ம.வி.,*
*கரவெட்டி.*
(c/28078)
அதிபர், ஆசிரியர்,
மாணவர்.

## காவியமான 31 ஆவது நாளில்
## கலை மைந்தனுக்கு அஞ்சலி

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் அரியாலையைப்
புகுந்த இடமாகவும் கொண்டு அரியாலையின் நாடகக்
கலைக்கு தனது தனித்துவ நடிப்பினால் மெருகூட்டிய
நாடக எழுத்தாளர், நடிகர், இயக்குநர்



அமரர் **அன்னலிங்கம் விஸ்வலிங்கம்**
*(V.T.A. விஸ்வா)*

அவர்களின் திடீர் மறைவு கலையுணர்வு மிக்க அரியாலை மக்களை
மிகவும் வேதனைக்கு உட்படுத்தியுள்ளது.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அரியாலை மக்கள் சார்பில்
*புங்கன்குளம்.*
நிர்வாகம், அரியாலை சனசமூக நிலையம்.
(சி-28064)

## தொண்டர் ஆசிரியர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,மே26

நிரந்தர நியமனம் தொடர்பாகப் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களை நாளை செவ்வாய்க்கிழமையும், நாளைமறுதினம் புதன்கிழமையும் காலை 10மணிக்கு யாழ்.ஆரியகுளத்திலுள்ள புதிய உயர் கல்லூரிக்குச் சமுகமளித்துப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஒத்திவைக்கப்பட்ட ஜி.சீ.ஈ. பரீட்சை திட்டமிட்டபடி நடக்கும்

கொழும்பு,மே26

•தென்பகுதியில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி எதிர்வரும் 31ஆம் திகதியும், முதலாம் திகதியும் நடைபெறுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (எ-12)

## மானிப்பாய் கனகசபை வீதி புனரமைப்பு

மானிப்பாய்,மே26

மானிப்பாய் தெற்கில் உள்ள கனகசபை வீதி எட்டுவருடங்களின் பின்னர் தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது. (எ-90)

## கணிதபாடத்தில் சித்திபெறத் தவறியோருக்கு விசேட வகுப்புகள்

யாழ்ப்பாணம்,மே26

கடந்த வருடம் ஜி.சீ.ஈ.சாதாரண தரப்பரீட்சையில் தோற்றி கணித பாடத்தில் சித்தியடையத் தவறிய மாணவர்களுக்கான விசேட இலவச கணிதபாட வகுப்புகள் வடமராட்சி கணித மூலவள நிலையத்தினால் நடத்தப்படவுள்ளன.

இதில் இணைந்து கல்வி கற்க விரும்பும் மாணவர்கள் கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்தில் அமைந்துள்ள கணித மூலவள நிலையத்தில் தமது பெயர் விபரங்களைப் பதிவு செய்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-12)

## பளைப் பகுதியில் 10 கிணறுகள் நிறுவப்படும்

தென்மராட்சி,மே26

பளை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பத்துக் கிணறுகள் நிக்கொட் நிறுவனத்தினரால் அமைக்கப்படவுள்ளன.

புலோப்பளை கிழக்கு, ,வண்ணாங்கேணி மத்தி பேரவை வீட்டுத்திட்டம், மாசார், அண்ணமார் கோவிலடி, கச்சார்வெளி, புலோப்பளை மேற்கு, பளைநகரம், மாசார் பாடசாலை அருகில், சோரன்பற்று ஆகிய இடங்களிலேயே இவ்வாறு கிணறுகள் அமைக்கப்படவுள்ளன.(எ-117)

## பளையில் 10 வீதிகள் புனரமைப்பு

பளை பிரதேசத்தில் உள்ள பத்து வீதிகள் உலக வங்கியின் உலர் உணவு வேலைத் திட்டத்தின்கீழ் புனரமைக்கப்படவுள்ளன.

தம்பகாமம் - அரசர் கேணி வீதி, பேராலை வீதி, சோரன்பற்று வீதி, புலோப்பளை மாதா கோயில் - அல்லிப்பளை வீதி, இத்தாவில் - மொண்குவான் வீதி, நவுண வெளி வீதி, செந்தில் நகர் வீதி, கச்சார் வெளி - செல்வபுரம் வீதி, கோவில்வயல் குறுக்கு வீதி, மாசார் சோமசுந்தரம் வீதி ஆகியவையே இவ்வாறு புனரமைக்கப்படவுள்ளன.

இவ்வேலைகள் பளைப் பிரதேச சபை ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளதென பிரதேச சபைச் செயலாளர் இ.து.சிவராசா தெரிவித்தார். (எ-117)

## சங்கத்தானை ஆலய பூந்தோட்டத்தில் கிரனேட், ஷெல் மீட்பு

சங்கத்தானை கந்தசாமி கோயிலின் பூந்தோட்டப் பகுதியில் இருந்து கிரனேட் ஒன்றும், வெடிக்காத நிலையில் இருந்த ஷெல் ஒன்றும் கடந்த வியாழன்று அங்கு வேலை செய்தவர்களால் மீட்கப்பட்டுள்ளன.

- இவ்வாறு மீட்கப்பட்ட வெடிபொருள்கள் தொடர்பாக படையினரிடம் தெரிவிக்கப்பட்டதையடுத்து படையினர் அவற்றை அந்த இடத்தில் வைத்து செயலிழக்கச் செய்தனர். (எ-31)




உலகப் புகழ் பெற்ற LG
தொலைக்காட்சிப் பெட்டிகள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக சேவையில் பெற்றிட



LG
JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766
(c-28069)

# நூல் வரிசை



**நூல்:** இலக்கிய விமர்சனம்
**ஆசிரியர்:** அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை

தமிழ்மொழியில் நாடக நூல்கள் குறைவு என்பது எல்லோருக்கும் தெரியும். நாடகநூல் விமர்சனநூல், ஒன்றுகூட இல்லை எனலாம்.

நாடகத்தின் குறை நிறைகளை ஆராய்கிறார் ஆசிரியர். 'கோடை' நாடகத்தின் அமைப்புச் சரியிலை. 'எழுச்சி' என்ற கட்டமே வராததால் விறுவிறுப்பு குறைகிறது. தேவை இல்லாத பாத்திரங்களும் சம்பவங்களும் வந்து குழப்பத்தை ஏற்படுத்துவதுடன் நாடகத்தின் ஓட்டத்தையும் தடை செய்கின்றன. செல்லம் என்ற தாய்ப் பாத்திரத்தைத் தவிர மற்ற எந்தப் பாத்திரமும் சரியாக வார்த்தெடுக்கப்படவில்லை. நாடகத்தின் முடிவும் சரியாக நியாயப்படுத்தப்படவில்லை என்று குறைகளைச் சுட்டிக்காட்டும் ஆசிரியர், அந்தளவில் நின்றுவிடாமல் குறைகளை எப்படி நீக்கலாம் என்பதையும் உதாரணங்கள் தந்து விளக்குகிறார்.

"கோடை" நாடகம் அழகான கவிதை நடையில் எழுதப்பட்டுள்ளது. ஆனால், அந்தக் கவிதை நடையே நாடகத்தின் பெரும் குறைபாடாகவும் உள்ளது. நாடகம் எந்த இடத்தைக் களமாகக் கொண்டு எழுதப்படுகிறதோ அந்த இடத்துப் பேச்சு வழக்கிலேயே அதன் உரையாடல் அமைந்திருக்க வேண்டும் என்கிறார்.

'நாகம்மாள்' க.பொ.த.உயர்தர வகுப்பில் தமிழ்மொழி கற்கும் மாணவர்களுக்குப் பாடநூலாக வைக்கப்பட்டுள்ளது.

ஒரு சிறிய கதைதான். கிராமத்து மக்களது இயல்பான வாழ்க்கையைச் சித்திரிக்கும் நாவல். கிளைக்கதைகள் ஏதுமின்றி வேகமாக ஓடுகின்றது என்று நாவலின் சிறப்புக்களை எடுத்துக்கூறும் சுந்தரம்பிள்ளை அதன் குறைகளையும் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.


நாவலின் அமைப்பு சரியில்லை. களம் மட்டும் அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. காலத்தைப்பற்றி ஒன்றும் அறிய முடியவில்லை. பாத்திர வார்ப்பிலும் கன பிழைகள் உள்ளன. நாவல் கூறும் கருத்தும் தெளிவாக இல்லை என்கிறார்.

கலாபூஷணம்
நவாலியூர் நா.செல்லத்துரை

**நூல்:** தெய்வீகமும் சமாதானமும்
**ஆசிரியர்:** கதிர் சரவணபவன்
**வெளியீடு:** வவுனியா தோணிக்கல் விசாலாட்சி சமேத விஸ்வநாதர் ஆலய பரிபாலன சபை.

இந்நூலை ஆக்கிய கவிஞரும், சிவசித்தாந்த வித்தகருமாகிய கதிர் சரவணபவன் அவர்கள் வட்டுக்கோட்டை சிவன்கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இலங்கை சுதந்திரமடைந்தபோது புலவர்கள் மத்தியிலே அகில இலங்கை ரீதியிலே நடத்தப்பெற்ற மரதனோட்டக் கவிதைப் போட்டியிலே முதற்பரிசைப் பெற்றவரும், இலங்கை தேசிய கீதத்தைத் தமிழிலே மொழிபெயர்த்தவருமாகிய முதுதமிழ் புலவர் மு.நல்லதம்பி அவர்களின் பேரனாகிய கதிர் சரவணபவன் அவர்களின் முதலாவது நூல் "சுதந்திர வாழ்வின் விடிவலைகள்"

இரண்டாவது நூல் "தெய்வீகமும் சமாதானமும்" ஆகும். இந்நூலில் வவுனியா பூந்தோட்டம் நரசிங்கர் சகாயமாதாபுரம் துர்க்கா பரமேஸ்வரி, சமளங்குளம் முத்துமாரியம்மன், தோணிக்கல் நாகபூசணி, விசாலாட்சி சமேத விஸ்வநாதர் ஆலயம் (ஆதிசிவன்), தவசிக்குளம் பாலவிநாயகர், ஜேர்மனி பிராங்போர்ட கற்பக விநாயகர் ஆகிய ஆலயங்கள் மேற் பாடப்பெற்ற திருவூஞ்சற்பாக்களும் மற்றும் பல ஆலயங்கள் மேற் பாடிய இடர் நீக்கு பதிகங்களும் சாகித்திய மண்டலப்பரிசுகள் பெற்ற கவிதைகளும் பிறவும் இடம்பெறுகின்றன. இக்கவிஞர் இடப்பெயர்வின் பின் வவுனியா ஆலடிவீதி தோணிக்கல்லில் வாழ்ந்து வருபவர். இக்காலத்தில் 1998இல் மனோலயா கலையாமியத்தால் கலைமணி விருதும், மெய்கண்டார் ஆதீன குருமுதல்வர் ஞானப்பிரகாசசிவம் அடிகளாரால் சிவசித்தாந்த வித்தகர் பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றவர்.



**நூல்:** நடுகல்
**ஆசிரியர்:** ராணி சீதரன்
**வெளியீடு:** யது

யாழ்ப்பாணம் பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வாழ்விடமாகவும் கொண்டவர் திருமதி ராணி சீதரன். இவர் திருகோணமலையில் தமிழ்ப் பாடத்திற்கான ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றுகின்றார்.

'மாங்கல்யம் தந்துநீயே', 'கன்னியாதானம்' என்ற சிறுகதைத் தொகுப்புக்களையும் 'தேன்சிட்டு' என்ற சிறுவர் பாடல் நூலையும் வெளியிட்ட இவரது நான்காவது நூல் "நடுகல்" சிறுகதைத் தொகுப்பு.

இந்த நூலினை வாசிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. பெண்ணியச் சிந்தனைகள் வளர்ந்துவரும் இந்த நூற்றாண்டில் பெண்ணியப் பார்வையோடு துடிப்புடன் எழுதிவரும் ராணி சீதரன் ஈழத்து சிறுகதை எழுத்தாளர் வரிசையில் குறிப்பிடத்தக்க, வளர்ந்து வரும் ஓர் எழுத்தாளர்.

அவர் தனது என்னுரையில் சங்ககால வீரப் பெண்மணியின் செயலை வெளிக்கொணர்ந்து அன்றிலிருந்து இன்றுவரை அன்பிற்கும் தியாகத்திற்கும் மட்டும் பெண் தன்னை அர்ப்பணிக்காது வீரத்திற்கும் வழிகாட்டியாகவும் முன்மாதிரியாகவும் விளங்குகின்றாள் என பெண்ணைத் தற்காலத்தோடு தொடர்புபடுத்திக்காட்டியுள்ளார்.

கதைகளில் பல யதார்த்தங்களை அப்பட்டமாக எடுத்துக்காட்டியுள்ளார். 'ஒரு கிராமம் அழுகிறது' என்ற கதை நெஞ்சைத்தொடும் கருவைக்கொண்டுள்ளது. மச்சம் பெண்ணிடம் இருக்கக் கூடாத வரட்டுக்கௌரவத்தை அழகாக வடித்துக்காட்டுகிறது. ஞாபகங்கள் அருமையான நினைவலைகளை ஆசிரியர்களின் ஒன்றிணைவை பசுமையான நினைவுகளுக்குள் இழுத்துச் செல்லும் ஒரு படைப்பாக விளங்குகின்றது. 'வாழ்தல்என்பது' என்ற கதை உண்மைச் சம்பவங்களால் பின்னப்பட்டு படிப்போருக்கு மனமாற்றங்களை ஏற்படுத்திச் சிந்திக்கத்தூண்டும் வகையில் ஓர் உணர்வுப் பெட்டகமாக விளங்குகின்றது. பலரது வாழ்வில் ஏற்பட்டிருக்கக்கூடிய அனுபவமாகவும் அது இருப்பதனால் கதாசிரியையின் கதை புனைவிற்கு அது வெற்றியைத் தரும் கதையாகவும் அமைந்துள்ளது.

இன்றைய சூழலில் எழும் மனப்போராட்டங்களை விடுதலை உணர்வுகளை அள்ளிக்கொட்டும் 'நடுகல்' உள்ளங்களை நெருடும் தனித்துவம் மிக்க ஒரு சிறுகதைத் தொகுப்பாக உள்ளது. அணிந்துரையில் கலாநிதி துரை மனோகரன் குறிப்பிட்ட தற்கால ராணியின் கதைகளில் போரின் தாக்கம், பெண்ணியச் சிந்தனைகள், மன உணர்வுகளின் சிதறல்களை அப்பட்டமாக எடுத்துக்காட்டும் நுட்பம் போற்றுதற்குரியது என குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

எதிர்காலத்தில் பெண் எழுத்தாளர்களின் மத்தியில் ராணி புரட்சிக் கதைகளின் ஒரு வழிகாட்டியாக விளங்குவாள் என்பதில் ஐயமில்லை. அவரின் முயற்சி பாராட்டப்படவேண்டியது. அத்துடன் இலக்கிய உலகின் அரவணைப்பும் இவருக்கு அவசியமானது.

சிறந்த சிறுகதைகளை இடைவிடாது படைத்து இலக்கிய உலகில் புனைகதைகளின் ராணியாகப் பிரகாசிக்கவேண்டும் என்பது எனது விருப்பம். அவரது பிரகாசமான எழுத்தாற்றலுக்கு எனது வாழ்த்துக்கள்.

*திருமதி கிருபா பவசிங்கம்.*
*(M.Phil)*

# 'அக்கினிப் பெருமூச்சு'

காணாமற் போனவர்களது உறவினர்களின் துயர்துடைப்பு நிதிக்காக மேடையேற்றப்பட்டு வரும் 'அக்கினிப் பெருமூச்சு' நாடக ஆற்றுகை பற்றி வெளிநாட்டுக் கல்வியாளர் ஒருவரின் பார்வை இது.

உடல் உரமாய் உயிர் மூச்சாய் கலந்து நிற்கும் தமிழ், வித்தாய், விதையாய், வேராய், மரமாய், விழுதாய் விரிந்திருக்கும் தமிழ், வாழ்ந்திருக்கும் யாழ்ப்பாணம் பழம் பெரும்



வரலாற்றுச் சுவடுகளைக் கொண்டிருக்கின்றது பல பேரறிஞர் பெருமக்கள் உதயமாகி தமிழ்த்தொண்டு செய்த தவப்பூமி இந்த யாழ்ப்பாணம்.

தமிழுக்குக்கென்று ஒரு தனி நாடு: தமிழருக்கென்று ஒரு தனிநாடு என்று இருந்தநிலை ஒரு காலம். யாவரும் தம் விழிநீரைக் காணிக்கையாக்குவர் என்பது திண்ணம்.

"சமாதானப் போர்" என்ற மூல மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே தமிழர்களைக் களையெடுத்துக் கொன்று குவித்த படலம் தொடங்கிய நிலை நாம் அறிந்ததே. அச்சூழலில் தான் தன் கணவனைத் தொலைத்த ஓர் இளம் பெண்ணின் உண்மைச் சம்பவம் காட்சியாக்கப்பட்டுள்ளது. கணவன் காணாமற்போனதால், அவன் மீண்டும் வருவான் என்ற நம்பிக் கையில் அப்பெண் தனது இயல்பான அலங்காரங்களோடு வாழ்கிறாள். நெற்றியில் திலகமிட்டு, குழலில் பூச்சூடி, வண்ண ஆடை உடுத்தி தினமும் கணவனை எதிர்பார்த்திருக்கிறாள். இது சராசரி மக்களுக்கு விளங்க முடி

போதும் அப்படி வாழ்ந்தவர்களுள் ஒரு தாய் தன் மகனைத் தேடிச் செல்கிறாள். அவளுக்குச் சரியான தகவல் தரப்படவில்லை. அவளது சூழலைப் பலர் சாதகமாக்கிக் கொள்கின்றனர். உதவி என்ற பெயரில் சிலர் அவளுக்கு இன்னல்களையும் பாலியல் கொடுமைகளையும் இழைக்கினறனர். இந்தத் தாய் இறுதிவரை தனது மகனை அடைய இயலாமல் போய்விட்டது. நாடகத்தில் இச்செய்தியை அழுத்தமாகக் காட்டியுள்ளனர் காணாமற்போன பிள்ளைகள் மற்றும் இளைஞர்களுள் பலர் உயிருடன் புதைக்கப்பட்டனர் என்ற உண்மையை ஈரமனத்தோடு உணர்ந்து ஏற்றுக்கொள்ளும் நிலைக்குத் தம்மை உள்ளாக்குகின்றனர். அவர்களது உடல் இனிவரும் சமூகத்திற்கு உரமாக மாறி இருக்கும் நிலையை தமக்கு நன்கு உணர்த்தியுள்ளனர். கல்லறைகள் வித்துக்களாகி பின் விருட்சங்களாக வெளிப்படும் காட்சிகளையும் நமக்கு நினைவுறுத்துகின்றன.

அந்த ஒரு தாய் மட்டுமல்ல அநேக தாய்மார்களும் தங்கள் பிள்ளைகளைப் பறி கொடுத்துள்ளனர். இதற்குத் தீர்வு கிடையாது என்பதை உணர்வு பூர்வமாக நாடகத்தில் உயிர்ப்பித்துள்ளனர். இறுதியில் யாழ்ப்பாணத் தமிழர்களின் வாழ்வு அன்றைய சூழலில் நம்பிக்கை இழந்து வாழும், வாழ வகையறியாது கலங்கிய நிலையில் இருந்ததைச் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளன.

அக்கினிப் பெருமூச்சு என்ற இந்த நாடகம் எழுந்ததின் நோக்கம் புனித

# ஒரு சமுதாயக் கண்ணாடி!

இன்று மீண்டும் அந்த நம்பிக்கை ஒளிக்கீற்றைக்காண நமது மக்கள் மனம் ஏங்கி நிற்கின்றனர்; கையேந்தி நிற்கின்றனர்; விழி பனித்து நிற்கின்றனர். இடையில்தான் எத்தனை எத்தனை இன்னல்கள்; எத்தனை எத்தனை இழப்புகள்; எத்தனை எத்தனை தவிப்புகள்.

யுத்தத்தில் வீட்டை இழந்தோர் ஒரு நிலையினர்; சுற்றத்தை இழந்தோர் ஒரு நிலையினர்; வாழ்வு இழந்தோர் ஒரு நிலையினர்; வாழும் துணிவு இழந்தோர் ஒரு நிலையினர். இவற்றுக்கெல்லாம் மேலாகக் கணவன், மகன், சகோதரன், அப்பா, தாத்தா என்று உறவுகள் காணாமற் போனது கலங்கச்செய்யும் ஒரு செயலாகும்.

**பேராசிரியர் கலாநிதி எஸ்.குமரன்**
*இந்திய ஆய்வியல்துறை மலாயாப் பல்கலைக்கழகம்,*
*கோலாலம்பூர்.*

ஏதோ காரணத்திற்காக நின்றவர்கள் நெடுந்தூரம் சென்று விட்டனர். நின்ற இடமும் மறந்து போனது; நெடுந்தூரமும் மறைந்து போனது. இன்று வருவார், நாளை வருவார், அடுத்த நாள் வருவார், அடுத்த வாரம் வருவார், அடுத்த மாதம் வருவார், அடுத்த ஆண்டு வருவார் எனக் காத்திருந்து காத்திருந்து, விழி பூத்திருந்து ஆண்டுகள் பலவாகியும் தகவல் ஏதுமின்றித் தவித்த உள்ளங்கள் தான் எத்தனை எத்தனை.

வயிற்றில் கருவையும், மடியில் குழந்தையையும், கையில் பிள்ளையையும் சுமந்தவர்கள் எத்தனை பேர், திருமணப் பந்தம் கொண்டு நெஞ்சில் கோடி ஏக்கங்களைச் சுமந்து வாழ்ந்த மகளிர்தான் எத்தனை பேர். இவற்றை வெறும் வார்த்தைகளால் சொல்லித் தீர்த்துவிட முடியாது. இவை அனைத்தும் காலத்தின் வடுவாக, வரலாற்றுச் சுவடாக மாறிப்போய்விட்டன.

இச்சூழலைப் பிறரறியச் செய்ய வெளிப்பட்டதே "அக்கினிப் பெருமூச்சு" என்ற இசை மேடை நாடகம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கரு சுமந்து, இசை பாடி இயக்கிய இந்நாடகத்தைப் பல்கலைக்கழக மாணாக்கர்கள் உயிர்ப்பித்திருப்பது சிறப்பு. இதில் பாத்திர மேற்று நடித்த அனைவரும் ரசிகர்களையும் பாத்திரமாக்கிச் சென்றனர். இந்நாடகத்தை உணர்வு நிலையில் பார்த்த, இரசித்த

யாத ஒன்றுதான். கணவனை இழந்தவள் அலங்காரங்களை இழக்க வேண்டும், மூலையில் ஒதுங்கிக்கிடக்க வேண்டும். சுபகாரியங்களில் ஈடுபட



கூடாது என அப்பெண்ணை இடித்துரைக்கின்றனர். சமுதாயப் போராட்டத்திற்கு மத்தியில், தன் கணவனை எதிர்பார்த்து வாழும் அப்பெண்ணின் உணர்வுகள் மிகத் தத்ரூபமாக உணர்ச்சி பூர்வமாக வெளிப்படுத்தி நம்மையும் உருக்கிவிட்டன.

இறுதியில் கடலோரத்தில் சில சடலங்கள் ஒதுங்கியிருப்பதாகவும், அதில் ஒன்றின் காற்சட்டையை எடுத்து வந்து அப்பெண்ணிடம் காணாமற்போன தன் கணவனின் உடைமையோ எனக் காட்டி வினவ, அது கண்டு மனம் குமுறித்துடித்த அவ்விளம் பெண்ணின காட்சி இன்னமும் நெஞ்சை விட்டு அகலாது இருக்கிறது. அப்படிப்பட்ட கொடுமைகளை இந்த யாழ்ப்பாணத் தமிழர்கள் அனுபவித்துள்ளனர். யாதும் அறியாத அப்பாவி பாமர மக்கள் 'சமாதானப் போரைப்' பற்றி எந்தக் கவலையுமின்றி வாழ்ந்து வந்த நிலையும் நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளது.

அக்கினிப் பெருமூச்சின் மற்றொரு செய்தி, இளைஞர்கள் காணாமற்போன சூழல். எதிர்காலத்தை நிர்ணயித்து முடிவு செய்யவேண்டிய பிள்ளைகளும், இளைஞர்களும் காணாமற்போய்விட்டனர். அவர்களைத் தேடியும் கிடைக்கப் பெறாமல் ஏமாற்றத்தோடும் திருமபுவர் என்ற ஏக்க எதிர்பார்ப்போடும் பல குடும்பங்கள் வாழ்ந்தனர் அப்

மானது. நாடகத்தின் வழி பெறப்படும் நிதியை காணாமற் போனவர்களின் குடும்பங்களுக்கு, அவர்களின் பிள்ளைகளின் கல்விச்செலவுக்கு நன்கொடையாகக் கொடுத்து வருவது இந் நாடகத்தை மேலும் புனிதப்படுத்துகின்றது. இந் நாடகத்தைச் சிறப்பாக மேடையேற்றிய எல்லோருக்கும் நமது வாழ்த்தும் பாராட்டும் உரியனவாகட்டும்.

அரசியல் ரீதியாகச் 'சமாதானம்' என்ற நிலைமாறி வந்தாலும், சாதாரண மக்களின் நிலைமாறுமா என்பது கேள்விக்குறியே. அதிலும் தங்கள் தாய், தந்தையரையும், சகோதரர்களையும், பிள்ளைகளையும், சுற்றங்களையும் இழந்த மக்களுக்கு 'சமாதானத் திட்டத்தின்' பயனாக எம்மாதிரியான உறுதிப்பாடு கிடைக்குமென்பதை ஒருவரும் சிந்திக்க இயலாது. அதுவேதான் இது போன்ற நாடக அரங்கேற்றங்கள் மூலமாகக் கிடைக்கப்பெறும் நிதியைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுத்துவரும் புனிதமான பணியை மேற்கொண்டுள்ளனர்.

இல்லாதவர்க்கும் இயலாதவர்களுக்கும் கொடுத்துதவுவது இருக்கின்ற நமது கடமை அன்றோ. உதவி என்று நாடிவருபவருக்கு உதவுதல் யாவருக்கும் உரிய பண்பாகும். தேடிச்சென்று, உதவும் மனப்பான்மை சான்றோருக்கு உரித்தான நேர்குணமாகும்.

வறியவருக்கு உதவி செய்பவர் யார் என்று கணக்குப் போடாமல் உதவியாக நாம் என்ன செய்யலாம் என்று சிந்திப்போம். நமது மக்களின் எதிர்காலம் செழிக்க நாம் இணைந்து செயற்படுவோம்.

இனிவரும் நமது சமூகம் அடிமை இல்லை என்று உலகிற்கு பறைசாற்றுவோம். அக்கினிப்பெருமூச்சை அன்பு பெருமூச்சாக, ஆனந்தப் பெருமூச்சாக மாற்ற புதிய விதி செய்வோம் வாரீர்!



**NRI INSTITUTE**
**(Affiliated to Bangalore University)**
[Reference Advertiscment of 25.05.03 Page -10]
For Details and Admissions
Contact:- Kesev Rao
*Director*
*NRI Institute (Bangalore)*
At No.40, Kandy Road,
Old Park Chinese Restaurant
(Opp.SLRC) Jaffna
On - 28th & 29th
Between 9.30a.m. - 4.30p.m. (18406)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி மேகலா வசந்தகுமார்

**(ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி)**

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேகலா வசந்தகுமார் 24.05.2003 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அருளானந்தம் (இளைப்பாறிய பதிவாளர், மன்னார் மாவட்ட நீதிமன்றம்) - கமலாலஷ்மி தம்பதியினரின் அன்பு மகளும் வசந்தகுமார் (யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் கஜானன், சுவஸ்திகாவின் பாசமிகு தாயாரும் லக்ஸ்மன் (இரசாயனவியற் துறை, யாழ்.பல்கலைக்கழகம்), றஞ்சித் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தர்மரத்தினம் மற்றும் செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் திருமதி வசந்தி கருணானந்தன், திருமதி சுகிர்தா லக்ஸ்மன் (கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2003) திங்கட்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*61/1 பருத்தித்துறை வீதி,*
*ஆனைப்பந்தி,*
*யாழ்ப்பாணம்.* (18423)

தகவல்:
த.வசந்தகுமார்
(கணவர்)

### திருமதி
### வயலா புஸ்பராணி செல்வரட்ணம் (ராணி அன்ரி)

தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கல்லூரி வீதி, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வயலா புஸ்பராணி செல்வரட்ணம் அவர்கள் 25.05.2003 ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற S.T.ஜீவரட்ணம் தம்பதிகளின் (யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர்) அன்பு மகளும் காலஞ்சென்ற A.P.சின்னத்துரை (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற S.S.செல்வரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும் ரஞ்சன், நளாயினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற டாக்டர் ஜவரத்தினம், திருமதி மலர் செல்வரட்ணம், B.ஜீவரட்ணம் (ஆஸ்திரேலியா), திருமதி மணி சற்குணராஜா (ஆஸ்திரேலியா), டாக்டர் K.ஜீவரத்தினம் (நியூஸிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை வட்டுக்கோட்டையில் இன்று (26.05.2003) திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு (புதியநேரம்) நடைபெற்றுப் பூதவுடல் வட்டுக்கோடை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவாக ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நோபல் விமலேந்திரன்
(யாழ்.கல்லூரி உப அதிபர்)

*கல்லூரி வீதி,*
*வட்டுக்கோட்டை.* (18425)

## கனிஷ்ட தேசிய மெய்வன்மை போட்டிகள்

கனிஷ்ட தேசிய மெய்வன்மை போட்டிகள் ஜுன் 6முதல் 8ஆம் திகதி வரை பதுளை வின்சென்ட் டயஸ் அரங்கில் நடைபெறவுள்ளன.

இலங்கை மெய்வன்மை சங்கம் இப்போட்டிகளை நடத்துகிறது. கடந்த வருடங்களில் 12,14,16,18,20 வயதுக் குட்பட்டோருக்கான போட்டிகளே நடைபெற்றன. இம்முறை முதல் தடவையாக 23 வயதுக்குட்பட்டோருக்கான போட்டிகளையும் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு தினம் மே 30 ஆம் திகதியாகும். பங்குபற்ற விரும்புவோர், 'பேர்னாட் பெரேரா, உதவிச்செயலாளர், இலங்கை மெய்வன்மைச் சங்கம் 33, டொரிங்டன் அவெனியூ, கொழும்பு - 7' என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

# ஜொலிஸ்ரார் கிண்ணத்தை யங்ஸ்ரார் கைப்பற்றியது!

ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்துக்காக ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஈ.எஸ்.பேரம்பலம் நிறுவத்தின் அனுசரணையுடன் நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

## விளையாட்டு

யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்திற்கும், பற்றீஸியன் விளையாட்டுக்கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற இறுதியாட்டதில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 4 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதல் துடுப்பெடுத்தாடிய பற்றீஸியன் அணி 27.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 145 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதில் அன்ரனிநயஸ் 41 ஓட்டங்களையும், ஆர்.விநோதன் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் 4.1 ஓவர்கள் பந்து வீசிய சசிவர்ணன் 9 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், எஸ்.ஜொனிற்ரன் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் அணி 32 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் எஸ். விஜயகர்ணன் , சி.சசிவர்ணன் ஆகியோர் ஆட்டமிழக்காது முறையே47, 18 ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக எஸ்.சசிவர்ணனும்(யங்ஸ்ரார்), சிறந்த துடுப்பாட்டவீரராக எஸ்.விஜயகர்ணனும்(யங்ஸ்ரார்) சிறந்த களத் தடுப்பாளராக ஆர்.ஷாஜகானும் (பற்றீஸியன்), சிறந்த பந்துவீச்சாளராக எஸ். சசிவர்ணனும்(யங்ஸ்ரார்) தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த ஆட்டத்துக்கு பிரதம விருந்தினராக யோகரத்தினம் நரேன் (யோகி), கௌரவ விருந்திரனராக ஈ.எஸ். பேரம்பலம் நிறுவனத்தின் உரிமையாளர் ஈ.எஸ்.பி.நாகரத்தினமும் கலந்துகொண்டனர்.

திருமதி ஜெயவதி நரேன் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்கினர். (ஓ-5)

## நட்பாஞ்சலி

11 - 09 - 1978



12 - 04 - 2003

### தர்மலிங்கம் பரஞ்சோதி

(மாணவன், வயம்ப பல்கலைக்கழகம்)

நிசப்தத்திலும் சப்தமிட்ட நீ
சப்தத்தில் நிசப்தமானது ஏன்?

உன்னோடு நாமிருந்த நாள்கள்
சப்தமிட்ட நாள்கள் சண்டையிட்ட நாள்கள்
ஆடிப்பாடிய நாள்கள்
பாஷை புரியாத ஊரில் கைப்பாஷையில்
பேசிய நாள்கள்
மரணப்படுக்கையிலும் மறக்காது நண்பனே!
உருவம் மறையலாம் நினைவுகள் மறைவதில்லை
இன்னும் உன் மரணத்தை மனம் ஏற்க மறுக்கிறது.

\- நண்பர்கள்.

**Faculty of Livestock, Fisheries & Nutrition**
**Faculty of Agriculture & Plantation Management**
(18341) **WAYAMBA UNIVERSITY OF SRILANKA.**

## ஆசியப் போட்டி சீனா விலகியது

இந்தியாவின் ஹைதராபாத் நகரில் நாளை மறுதினம் புதன்கிழமை ஆரம்பமாகவுள்ள ஆசிய கிராண்ட் பிறிக்ஸ் மெய்வன்மைப் போட்டியிலிருந்து சீனா விலகியுள்ளது.

சார்ஸ் நோய் காரணமாக இப் போட்டிகளில் சீனா பங்கேற்கவில்லை என ஆந்திர மாநில விளையாட்டு ஆணையக நிர்வாக இயக்குநர் எஸ்.வி.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

போட்டியில் பங்கேற்கும் அனைத்து வீரர்களும் சோதனைக்கு உட்படுத்தப்படுவர் 'சார்ஸ்' நோய் அறிகுறி எவருக்காவது இருந்தால் அவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் சுப்பிரமணியம் கூறினார்.

## நடைப் போட்டியில் முதியவர் சம்பியன்

24ஆவது இந்திய தேசிய மாஸ்டர்ஸ் மெய்வன்மைப் போட்டிகளில், 10 கி.மீ. நடைப்போட்டியில் 76 வயதான கே.கே.பனோட் சம்பியன் பட்டம் வென்றுள்ளார். அண்மையில் இம்பால் நகரில் இப்போட்டிகள் நடைபெற்றன.

65 வயதில் நடைப் போட்டிகளில் பங்கேற்கத் தொடங்கிய பனோட், ஏற்கனவே அரை மரதனில் 2ஆவது இடமும் பஞ்சாப் மூத்தோர் மெய்வன்மைச் சங்கம் நடத்திய 10 கி.மீ நடைபந்தயத்தில் முதலிடம் பிடித்துள்ளார்.

ஓய்வு பெற்ற ஹிந்தி ஆசிரியரான பனோட், 1992இல் போட்டிகளில் பங்கேற்கத் தொடங்கினார்.

எனினும், சாலை விபத்தில் சிக்கிய பனோட் துரதிர்ஷ்டவசமாக காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. இவ் விபத்தினால் அவரது ஒருகால் மற்றொரு காலைவிட 4செ.மீ உயரம் குறைந்தது.

இவ்விபத்தினால் ஒராண்டு காலம் எந்தப் போட்டியிலும் அவர் பங்கேற்க முடியவில்லை. இருப்பினும், மனம் தளராத பனோட், மீண்டும் பயிற்சியில் இறங்கி சம்பியனாகியுள்ளார்.

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,மே26

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்று வரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை நடைபெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:

பிற்பகல் 4.00மணி-கிறின் கிங்ஸ் வி.க.எதிர் யுத்காமல் வி.க.

பிற்பகல்5.15மணி-கலை வாணி வி.க.எதிர் எவரெஸ்ட்.வி.க.


சூழலுக்குப் பொருத்தமான உற்பத்தி வரிசையிலிருந்து

LA CEYKEM INTERNATIONAL (PVT) LTD வழங்கும்

புது தோற்றத்துடனான உற்பத்திகள்
இப்போது உங்கள் நகரில்




விற்பனை முகவர்:-
ஜெகன் பார்மசி
46, புளூமெண்டால் வீதி
கொழும்பு-13

462 B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:- 021-2222194
பாக்ஸ்:- 021-2223191
செல்லிட பேசி:- 077-7402653

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3648002 இருந்து 3664285 வரை

சீட்டிழுப்பு இல. 1403

திகதி 24.05.2003

## வெற்றி எண்கள்

**19 23 30 34 40**

போனஸ் எண் **16**

ஜக்பொட் பரிசு

**ரூபா.2,888,200/-** வெல்லப்பட்டுள்ளது

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 2,888,200/- | 2,888,200/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 100,000/- | 100,000/- |
| 4 | 101 | 10,000/- | 1,010,000/- |
| 3 | 5,048 | 500/- | 2,524,000/- |
| 2 | 84,346 | 20/- | 1,686,920/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 19ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 103,946 | 10/- | 1,039,460/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.9,248,580/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்

**ரூபா. 1,500,000/-**

தொடர் இல. 2666188க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 மே 28ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3652872-0-88
3662289-6-72
3664088-4-91
3651576-1-90
3658927-4-25

PHOENIX O&M

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 476 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு | |
| திகதி | 23.05.2003 | செல்லுபடியாகும் தொடர் இல. 5920389-5932979 | |

வெற்றி இலக்கங்கள் **21 33 39 48**

லக்கினம் மேடம்

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்பட்டது

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,000,000/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 278,018 | 10 | 2,780,180 |
| 2 இலக்கங்கள் | 25,519 | 20 | 510,380 |
| 1 இல + லக்கினம் | 25,239 | 30 | 757,170 |
| 2 இல + லக்கினம் | 2,318 | 100 | 231,800 |
| 3 இலக்கங்கள் | 694 | 500 | 347,000 |
| 3 இல + லக்கினம் | 65 | 5,000 | 325,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 1,000,000 | 1,000,000 |
| மொத்தம் | 331,857 | - | 6,251,530 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,251,530/-

தொடர் இல. 4943132க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 மே 27ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில்: விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்


5922565-7-06
5923888-1-52
5920803-0-24
5924649-8-12
5928514-4-91

PHOENIX O&M

# சுடர் ஒளி

01.06.2003 இதழில்

விலை 16 /=




* இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு நிறுவுவதில் புலிகள் உறுதி தெரிவிப்பு
* தென்னிலங்கையை உலுக்கிய வரலாறு காணாத அனர்த்தம்
* சர்வதேச ஆதரவை பொருளாதார வளமாக மாற்றும் அரசின் கபடத்தனம்
* முதலில் இடிபட்ட சனம் பின்பு வரிசையில் நின்றது எப்படி?

\- தேரடி.

(சி28031)

மற்றும் இணையத்தளங்களிலிருந்து, அதிசயம் ஆனால் உண்மை, பித்தன் பதில்கள், சதாம் தொடர், சினிமா, விளையாட்டு, மருத்துவம், இளஞ்சுடர், திருக்கோணேஸ்வர தொடர் கட்டுரை, க்ரைம், அலைகளின் காவியம் உட்பட பல்வேறு அம்சங்கள்.

# டோக்கியோ மாநாட்டுக்காக பிரதமர் ஜப்பான் பயணம்

அடுத்த மாதம் 9, 10ஆம் திகதிகளில் ஜப்பான் தலைநகரில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தில் பங்கு கொள்வதற்காகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஏழாம் திகதியளவில் ஜப்பான் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் பிரதமர் உரையாற்றவுள்ளதாகவும் பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-12)


## நேர்முகத் தேர்வு

உதயன் பத்திரிகையில் 7,8,9-03-03 ஆகிய திகதிகளில் வெளிவந்த பணிநிலை வேண்டுகை விளம்பரத்திற்கமைய (இல.1812) யாழ்.மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு 31-05-2003ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு பளையில் உள்ள வருவாய்ப்பகுதிச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வுகளுக்குரிய சகல ஆவணங்களுடனும் சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பாண்டியன் வாணிபம் நிர்வாகம்.
தமிழீழப் போக்குவரவுக் கழகம். (18361)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை

திருமதி மேகலா வசந்தகுமார்

அவர்களின் திடீர் மறைவிற்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன், இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

இந்து மன்றம்
(18421) யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியையான

திருமதி மேகலா வசந்தகுமார்

அவர்களின் திடீர் மரணச்செய்தி எமக்கு மிகுந்த அதிர்ச்சியைத் தந்துள்ளது. அன்னாரது பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இன்ரறக்ற் கழகம்
(18422) யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் பிரதி அதிபராகவும்
பதில் அதிபராகவும் கடமையாற்றிய

V.K. சிவானந்தன்

அவர்களின் அகால மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

ஹாட்லிக்கல்லூரி சமூகம்,
(18413) யா/ஹாட்லிக்கல்லூரி, பருத்தித்துறை

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மேதகு

ஆயர் வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை

(முன்னாள் யாழ்.ஆயர்)



பாரினிலே பகலவன் மறைந்திட்ட
31ஆம் நாளினிலே!
பாசத்தை இழந்த பாலகனாய்
தாய்ப்பறவையை இழந்த
குஞ்சுபோல்
பரிதவிக்கின்றேன் ஆண்டவரே!
இறுதிவரை உறுதியாக வழிகாட்டி
வாழ வைத்த அன்பனையா நீர்
துடிக்கின்றேன்.

என்றும்
உம் நினைவுகளுடன்
செல்வம் குடும்பத்தினர்.

இல, 27, கதிரறல் வீதி,
யாழ்ப்பாணம். (18418)


### சாவகச்சேரியில் மிதிவெடி விழிப்புணர்வு கண்காட்சி

யாழ்ப்பாணம்,மே26

மிதிவெடி, பொறிவெடி தொடர்பான விழிப்புணர்வுக் கண்காட்சி இன்றும், நாளையும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு நிதியமும், சிறுவர் கழகங்களின் இணையமும் இணைந்து இந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளன.

இந்தக் கண்காட்சி தொடர்ந்தும் 29ஆம், 30ஆம் திகதிகளில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் இடம்பெறும்.

மேற்படி கண்காட்சி தினமும் காலை 9மணிமுதல் மாலை 5மணி வரை இடம்பெறும் என்றும் -

தொடர்ந்து சிறுவர்களால் அரங்கேற்றம் செய்யப்படும் மிதிவெடி விழிப்புணர்வு சம்பந்தமான நாடகம் இடம்பெறும் என்றும் -

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் யாழ்.மாவட்ட திட்டமிடல் உத்தியோகத்தர் ஜெ.தற்பரன் தெரிவித்துள்ளார். (எ-12)

### 25 வருடமாக புனரமைக்கப்படாத மானிப்பாய் வீதிகள்

மானிப்பாய்,மே26

மானிப்பாய் வடக்கு உச்சியோடை வீதி, இராசகாரியர் வீதி, செக்காலை வீதி என்பன கடந்த 25வருடங்களுக்கு மேலாகப் புனரமைப்புச் செய்யப்படவில்லை.

இதனால் மேற்படி வீதிகளால் பயணம் செய்வோர் பெரும் அசௌகரியங்களைச் சந்திக்கவேண்டி ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

வீதிகள் அனைத்தும் பற்றைகள் செடிகள் வளர்ந்து புதர் மண்டிக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-90)

### வீதியின் மத்தியில் வீடியோப்படக்காட்சி பாதசாரிகள் சிரமம்

குருநகர்,மே26

குருநகரிலுள்ள மக்களில் ஒரு சிலர் வீதிகளின் மத்தியிலும் வீதியின் அருகிலும் வைத்து இரவு நேரங்களில் காண்பிக்கும் வீடியோ படக் காட்சிகள் காரணமாக வீதிப் போக்குவரத்து பெரும் நெருக்கடியைச் சந்தித்துள்ளதாகக் கூறப்பட்டது.

வீடுகளில் நடைபெறும் உபசரணைக் கொண்டாட்டங்களைத் தொடர்ந்துவரும் நாள்களில் வீடியோப் படக்காட்சி இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-51)

### சட்டவிரோத மின் பாவனை அதிகரிப்பு

அரியாலை மற்றும் கொழும்புத்துறைப் பகுதிகளில் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்துள்ளது.

பல இடங்களில் இராணுவ முகாம்கள், காப்பரண்களுக்கு செல்லும் மின் இணைப்புகளில் இருந்து அருகில் உள்ள வீடுகளுக்கு மின்சாரம் பெறப்படுவதை அவதானிக்கமுடிகிறது.

- இவ்வாறு மின்சார சபையின் அனுமதியின்றி மின்சாரம் பயன்படுத்தப்படுவதால் இப்பகுதியில் மின் ஒழுக்கு ஏற்பட்டு மின் தடை ஏற்படுவதாகவும் கூறப்படுகிறது.

### ஆவணங்கள் இல்லாத வாகனங்கள் நுழைய முகமாலையில் தடை!

வாகனவரி, காப்புறுதி, சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல் வன்னியில் இருந்து முகமாலையின் ஊடாக வரும வாகனங்கள் பொலீஸாரால் திருப்பி அனுப்பப்படுகின்றன.

வன்னியில் வாகன காப்புறுதிப் பத்திரம் பெறுவதற்கும், யாழ்ப்பாணத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்குமென வாகனங்களுடன் வருவோரும், புதிதாக வாகனங்கள் கொள்வனவு செய்துகொண்டு வருவோரும் யாழ்ப்பாணம் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

கடந்த ஒரு வாரமாக இப்பத்திரங்களை பொலீஸார் தீவிரமாக பார்வையிட்டு வருகின்றனர். அடுத்த மாதம தொடக்கம் வாகனவரி, காப்புறுதி, சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாத வாகனங்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படுமென பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

முகமாலைச் சோதனைச் சாவடியில் தமிழ்தெரிந்த பொலீஸார் வாகனச்சாரதிகளுக்கு விளக்கமளித்து திருப்பி அனுப்புவதைக்காணமுடிகின்றது. (ஒ-117)

## கல்விச்சாலைக் காட்சிகள்



மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயமும் மாதகல் நுணசை வித்தியாலயமும் இணைந்து அண்மையில் நடத்திய மெய்வன்மைப் போட்டிகளில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட சண்டிலிப்பாய் உதவி பிரதேச செயலர் ச.செல்வராசா மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் வித்தியாலய அதிபர்களான முறையே வீ.சுப்பிரமணியம், க.சிவனேஸ்வரன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ135)



காரைநகர் ஊரி அன்ரசன் முன்பள்ளி நிலையத்தின் வருடாந்த விளையாட்டுபோட்டிகளில் வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்கான பரிசினை காரைநகர் தெற்கு கிராம அலுவலர் ஆர்.இராஜதுரை வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் ஆசிரியை மு.மஞ்சுளாதேவி காணப்படுகின்றார். (எ-16)



உடுவில் கல்விக்கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளராகக் கடமை யாற்றி ஓய்வுபெற்றுள்ள அ.தற்பரானந்தனுக்கு உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை சமூகத்தினரால் அளிக்கப்பட்ட பாராட்டு விழாவில் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா பொன்னாடை போர்த்து கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (எ-152)



கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற முறைசாராக் கல்விப் பயிற்சிநெறி மாணவர்களின் கண்காட்சியை வலயக் கல்விப் பணிப்பாளர் ச.செல்வராசா நாடா வெட்டித் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் காணப்படுகின்றனர்.

# கண்ணீர்ப் பூக்கள்



எமது கல்லூரி ஆசிரியையும் எமது நிர்வாகசபை உறுப்பினருமாகிய

**திருமதி மேகலா வசந்தகுமார்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை. (C/28084) பாடசாலை அபிவிருத்திச்சங்கம்.

# கண்ணீர்ப் பூக்கள்



எமது கல்லூரி ஆசிரியை

**திருமதி மேகலா வசந்தகுமார்**

அவர்களின் திடீர் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை. (C/28085) -ஆசிரியர் கழகம்.

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 11 - 09 - 1978



உதிர்வு 12 - 04 - 2003

அமரர் **தர்மலிங்கம் பரஞ்சோதி**

(வயம்ப பல்கலைக்கழக மாணவன்)

எங்கள் அன்பு மகனும், அருமை அண்ணனும், ஆசைத் தம்பியும் ஆகிய எங்கள் செல்வம் அமரர் பரஞ்சோதி அவர்களின் மரணச்சடங்கிலும், இறுதிக்கிரியைகளிலும் கலந்துகொண்டு எமக்குப் பலவேறு வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் நாம் எமது வீதியை நொந்து கதறிய போது ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். எங்கள் செல்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல எமது குலதெய்வமாகிய அன்னை சிவகாமி அம்பாளின் பாதங்களைப் பணிந்து பற்றி நிற்கின்றோம்.

ஆவிலி, காரைநகர். (18426) - குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

மலர்வு 08 - 10 - 1937



உதிர்வு 26 - 04 - 2003

## அமரர் அருட்பிரகாசம் சிவதாசன்

(முன்னாள் முகாமையாளர் N.VAITILINGAM & CO Ltd. COLOMBO)

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து மறைந்த உங்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சதுப்மலை மந்தியைப் பிறப்பிடமாகக் கொண்ட **அருட்பிரகாசம் சிவதாசன்** அவர்கள் 26-04-2003 இல் இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (25-05-2003) ஞாயிற்றுக்கிழமை கீரிமலையில் நடைபெற்றன.

அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்தியமும் இன்று (26-05-2003) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளில் கலந்து அவரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திப்பதோடு மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"கோகனதை வாசா" சதுமலை மந்தி, மானிப்பாய் (18432) - சகோதரர்கள்.

## தென்மராட்சியில் பலாப்பழ 'சீஸன்'

தென்மராட்சி,மே26

பலாப்பழ சீஸன் ஆரம்பித்து விட்டதால் சாவகச்சேரி சந்தைக்கு பெருமளவு பலாப்பழங்கள் வருகின்றன. தென்னிலங்கைக்குச் செல்வோர் பலாப்பழங்களைக் கொள்வனவு செய்து வாகனங்களில் கொண்டு செல்வதைக் காணமுடிகிறது. (ஐ-117)

## பொ.ஐ.முன்னணி ஆதரவாளரின் வீடு உடைத்து சேதம்

புத்தளம்,மே26

புத்தளம் நகரில் உள்ள பொது மக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளரான ஏகவில் என்பவரின் வீட்டுக்குள் நேற்றுமுன்தினமிரவு புகுந்த குழுவொன்று வீட்டை அடித்து உடைத்து சேதப்படுத்தியுள்ளது.

முதலாம் வட்டாரத்தில் இவ்வீடு அமைந்துள்ளது. பல்லாயிரக் கணக்கான ரூபா பெறுமதியான பொருள்கள சேதமாக்கப்பட்டுள்ளன.

அரசியல் காரணங்களே இதன் பின்னணியாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டது.


BIT

தெரிவுப் பரீட்சை 2003

கொழும்பு பல்கலைக் கழகத்தின் BIT கற்கை நெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கும் பயிற்சி வகுப்புகளும் 07.06.2003 அன்று ஆரம்பமாகின்றன. யாழ். மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்த அனைத்து விண்ணப்பதாரிகளும் இதில் கலந்து பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலதிக விவரங்களுக்கு இயக்குநர் IIS

(C/28086) யாழ்ப்பாணம்.

இணைந்த கணிதம்

BY.குணம்

பிரத்தியேக வகுப்புக்கள் புதிய பிரிவு 02.06.2003

A/L 05 இருடிச்சமன்பாடு,தாவிகள் 04 தொகையிடு, மொத்தல் 03 கற்கத்தவறிய அலகுகள்

விவரங்களுக்கு: 12ஏ/1, இந்து மகளிர் கல்லூரி முன்பாக யாழ்ப்பாணம்.

திங்கள் முதல் சனி வரை 03 TO 05 P.m. (18429)

லஷ்மி சினிமா (இணுவில்)



விஜய், ஷாலினி மற்றும் பலர் நடித்த காதலுக்கு மரியாதை

காட்சி 11.00, 2.00, 7.00 (பு.நேரம்)

நிறைஞ்சனாலி

எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, நாகேஸ், வீ.கே.இராமசாமி நடித்த இரகசியப் பொலிஸ் 115

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

CASTAWAY

லிபேட்டி அச்சுவேலி

விஜய், ரம்பா நடித்த என்றென்றும் காதல்



11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்

மூன்றாவது வாரம் விஜய், மீராஜஸ்மின், கருணாஸ் புதிய கீதை



காட்சிகள் 10.30, 2.30, 6.30, சனி, ஞாயிறு 10.30, 2.30, 6.30, 9.30 (C27626)

நாகம்ஸ் சுன்னாகம்

சரத்குமார், சுகன்யா, ரகுவரன் நடித்த கேப்டன்

தினசரி காட்சிகள்: 11.00, 2.00, (பு.நே.) (18384)


# உயர்தொழில் நுட்ப மாணவரும் உதவி

யாழ்ப்பாணம்,மே26

யாழ்.உயர் தொழில்நுட்ப மாணவர் ஒன்றியம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தென்பகுதி மக்களுக்கு உணவுப்பொருள்கள் மற்றும் உடுபுடவைகளை நேரில் சென்று வழங்கியுள்ளது.

மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களிடம் சேகரிக்கப்பட்ட இந்தப் பொருள்கள் யாழ்ப்பாணத்திலிருந்து லொறிமூலம் கொண்டுசெல்லப்பட்டு, நாட்டின் ஏனைய உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியங்களுடன் இணைந்து உயர் தொழில்நுட்ப நிறுவன அலுவலக உதவியுடன் நாளை செவ்வாய்க்கிழமை பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 - 09 - 1932



மறைவு 06 - 06 - 2002

## அமரர் கந்தையா அம்பலவாணர்

(ஓய்வு பெற்ற அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்)

புன்சிரிப்புப் பூத்த புனிதத் திருவதனம்
எம் வீட்டில் எப்போதும் ஒளியாய் நிறைந்திருக்கும்
அன்புக்கதை பேசி உறவாடும் நீ பிரிந்து
ஆண்டொன்று ஆனாலும் எம்துயரம் மாறாது!

'பிறேம பவனம்', இணுவில் மேற்கு, இணுவில். (18435) பாசமுடன் மனைவி,மக்கள், பேரப்பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி

அமரர் **வி.கே.சிவானந்தன்**

(அதிபர்)

அமரத்துவம் அடைந்த அமரரின் அகால மறைவால் ஆழ்ந்த அதிர்ச்சி அடைந்துள்ள நாம் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கரவெட்டி. (C28088) அதிபர் சங்கம், கரவெட்டி கோட்டம்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கேசவராணி நடராசா (பொன்னு)

24.05.2003 அன்று அகால மரணமான தொண்டமனாற்றைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணன் நடராசாவின் மனைவியான திருமதி கேசவராணி நடராசாவின் இறுதிக் கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று (26.05.2003) திங்கட்கிழமை பி.ப. 4.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

106, கனகரத்தினம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (18436) தகவல்:- க.சிங்கராசா(சகோதரன்) உரிமையாளர் ஸ்ரீ 1724

## V.K.சிவானந்தன் (அதிபர் தரம் 2-I)

(உப அதிபர்,யா/நெல்லியடி ம.ம.வி. கரவெட்டி)

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று காலை 10மணிக்கு நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தாமரைக்குளம், துன்னாலை, கரவெட்டி. T.P.-070 212857 (C28089) குடும்பத்தினர்.

## திருமதி T.S.பொன்னுச்சாமி தேசிகர் மகேஸ்வரி அம்மா

பலாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மகேஸ்வரி அம்மா அவர்கள் நேற்று (25.05.2003) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் T.S. பொன்னுச்சாமி தேசிகர் (ஆர்மோனிய வித்துவான்) அவர்களின் அன்பு மனைவியும் ஜெகதீசன்(வைத்தியர்),ஆறுமுகதன் (வைத்தியர்), உமாகாந்தன், பாரதி(பாப்பா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பார்வதி, முருகதாஸ், சகுந்தலா ஆகியோரின் பெரிய தாயாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2003) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அளவெட்டி மயிலங்காடு வளவு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கேணிப்பிட்டி மயானத்தில் அடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மயிலங்காடு வளவு, அளவெட்டி. (18439) தகவல்: ந.இந்திரன் (பெறாமகன்)

## Dr. சுப்பிரமணியம் சிவயோகநாதன்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கைதடி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட Dr.சுப்பிரமணியம் சிவயோகநாதன் 24.05.2003 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-வள்ளியம்மை தம்பதிகளின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா - சேதுப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற இலட்சுமி அம்மாளின் அன்புக்கணவரும் சியாமளா (ஆசிரியை, யா/கைதடி குருசாமி வித்தியாலயம்), சிவரூபி(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் Dr.சுமனசீலன், விஜயநேசன்(சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் சிவகுமாரன், செல்வராஜா(கனடா), பத்மாவதி(கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரரும் கம்சானந்தி, நிலாந்தினி, விதுஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (25.05.2003)ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கைதடி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்

"ரட்னவாசா", கைதடி வடக்கு, கைதடி. (18428) தகவல்: சியாமளா (மகள்)

# கிழக்கில் தமிழ்க் கட்சிகளின் அலுவலகங்களுக்கு பாதுகாப்பு

மட்டக்களப்பு நகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் அண்மைக்காலமாக தொடர்ந்து இடம்பெற்றுவந்த தாக்குதல் சம்பவங்களை அடுத்து அந்தப் பிரதேசங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

பொலீஸ் தரப்புத் தகவல்களின்படி இம்மாதம் தாக்குதல் சம்பவங்கள் இந்தப்பகுதிகளில் அதிகரித்துள்ளதாகவும், இதுவரை ஆறு கைக்குண்டுத்தாக்குதல்களும் இரண்டு ஆள் கொலைச்சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவங்களை அடுத்து மட்டக்களப்பு நகரில் உள்ள புளொட், ஈ.பி.டி.பி. மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ்.(வரதர் அணி) ஆகிய கட்சிகளின் அலுவலகங்களுக்கு மேலதிக பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கட்சிகளின் உறுப்பினர்களை உரிய பாதுகாப்பின்றி வெளியே நடமாட வேண்டாம் என்றும படைத்தரப்பினர் அறிவுறுத்தி இருக்கின்றனர்.

இந்தக்கட்சிகளின் அலுவலகங்கள் அமைந்துள்ள வீதிகளின் ஊடாக பொலீஸ், இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படை கொண்ட கூட்டு ரோந்து நடவடிக்கைகளும் தற்போது விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பொலீஸார், வீதிகளில் திடீர் சோதனை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். (ஐ-9)

## பஸ் சாரதி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தனர். அவரை அடுத்தமாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை - கண்டிவீதியில் பஸ்ரியன் ஹோட்டலுக்கு முன்பாக கடந்த வெள்ளியன்று சைக்கிளில் சென்ற பாடசாலை மாணவி ஒருவரை மோதிய சம்பவம் தொடர்பாக போக்குவரத்துச் சபையின் மற்றொரு சாரதியையும் விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தர விட்டிருக்கிறார்.

காயமடைந்த மாணவி கையுறிந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றார்.(ஐ-3)

## இடைக்கால........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமானால் இடைக்கால நிர்வாகம் ஒன்று வடக்கு - கிழக்கில் ஏற்படுத்தப்படவேண்டும். அதில் புலிகளும் பங்கேற்கவேண்டும். இதனையே காலஞ்சென்ற சௌமியமூர்த்தி தொண்டமான் அரசுக்கு வலியுறுத்தி இருந்தார். அவரின் தீர்க்க தரிசனமான இந்த யோசனை செயல் வடிவம் பெற வேண்டிய காலம் வந்துவிட்டது. இந்த வடிவமைப்பு அன்றே செயற் படுத்தப்பட்டிருக்குமாயின் பாரிய அனர்த்தங்களையும் உயிரிழப்புக்களையும் பொருளாதாரச் சீர்கேடுகளையும் நாடு எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது.

சமாதான முயற்சி விடயத்தில் அரசு எடுக்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பூரண ஆதரவை வழங்கும்.

- இவ்வாறு அமைச்சர் கூறியதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## அமைச்சர் ஹக்கீம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கவுடனும் அமைச்சர் ஜி.எல் பீரிஸுடனும் அமைச்சர் ரவூப்ஹக்கீம கலந்து ரையாடியுள்ளார்.

துறைமுகங்கள் கப்பல் துறை அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும் இந்த விஜயத்தின் போது நோர்வே பிரதிநிதிகளுடன் அவர் ஆராய்வார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-9)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தால் அதற்கான முன்னோடி ஏற்பாடுகளையும் நிகழ்ச்சி நிரலையும் இந்த விஜயத்தின்போது அமைச்சர் ஜப்பான் அதிகாரிகளுடன் இணைந்து தயாரிப்பார் என்று தெரிவிக்கப்படுகிது.

இந்த விஜயத்தின் போது ஜப்பான் வெளிவிவகார அமைச்ச ஜப்பான் பிரதமரின் தூதுக்குழுவினர், ஜப்பான் அரச அதிகாரிகள் ஆகியோரை அமைச்சர் மொறகொட சந்தித்து கலந்துரையாடுவார். எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## பொலிகண்டி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இவர் அவ்வாறு பொலிகண்டிக்குச் சென்றிருந்த வேளையிலேயே அங்குவைத்துக் கடத்தப்பட்டிருக்கிறார். பொலிகண்டி கந்தசுவாமி கோயிலடியிலுள்ள ஒற்றுமை விளையாட்டுக் கழக மைதானத்தில் இந்த மாணவன் சிறுவர்களுக்குப் பயிற்சி அளித்துக்கொண்டிருந்த சமயம் அவ்விடத்துக்கு வெள்ளை நிற வான் ஒன்றுடன் வந்த சிலர் அவரை அழைத்து உரையாடிவிட்டுத் திடீரென வானுக்குள் தள்ளி ஏற்றிக் கடத்திச் சென்றனர் எனறு கடத்தப்பட்ட மாணவனின் தந்தையார் தனது முறைப்பாட்டில் தெரிவித்திருக்கிறார்.

மாணவனைக் கடத்திச் சென்ற வானில் இலக்கத்தகடு இருக்கவில்லை என்றும், அந்த வான் நவிண்டில் வீதி வழியாக வேகமாகச் சென்று மறைந்தது என்றும் சம்பவத்தை நேரில்கண்ட சிறுவர்கள் தெரிவித்திருக்கின்றனர். (ஐ-70-3)

# மண்டைதீவில் கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,மே26

மண்டைதீவின் சில பகுதிகளில் கசிப்பு உற்பத்தி மற்றும் மதுபாவனை அதிகரித்துள்ளன.

அடிக்கடி இந்தப் பகுதியில் இடம் பெற்றுவரும் கோஷ்டி மோதல்கள் மற்றும் சச்சரவுகளுக்கு இத்தகைய கசிப்பு மற்றும் மதுபாவனையே காரணம் எனத்தெரிவிக்கப்படுகிறது.

கசிப்பு உற்பத்தி, சட்டவிரோத மது விற்பனை என்பன தொடர்பாக சம்பந்தப்பட்டோர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-12-88)

# கண் நோயால் பலருக்கு பாதிப்பு

தென்மராட்சி,மே26

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளில கண்நோய் வேகமாக பரவி வருவதால் பெருமளவு நோயாளர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக வருக்கின்றனர்.

அத்துடன் பளை, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஐம்பதுக்கு மேற்பட்ட நோயாளர்கள் தினமும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில கண் சிகிச்சை பெறவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## சு.க.-ஜே.வி.பி.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்கள் குறித்து உறுப்பினர்களின் கருத்துக்கள் அறிந்து கொள்ளப்படும் என்று சுதந்திரக்கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார். இக்கூட்டத்தை அடுத்து சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பியும் மேலும் ஒரு சுற்றுப் பேச்சை நடத்தி இறுதித்தீர்மானம் மேற்கொள்ள இருக்கின்றன எனவும் அப்பேச்சாளர் கூறுகின்றார்.

(ஐ)

Z to Infinity IT Academy
திருநெல்வேலிச் சந்தி
திருநெல்வேலி
Video Mixing Classes
Lecturer By:-
Mr.S.Selvathashan.
பிரிவு II ஆரம்பம்
ஞாயிறு 01.06.2003
(8.30ப.நே.) (18387)

# நிரந்தரப் பாடசாலை ஒன்றை அரசர் கேணியில் அமைக்குக!

## அப்பகுதி மக்கள் கோரிக்கை

தென்மராட்சி,மே26

பளை அரசர் கேணியில் கடந்த 13 வருடங்களாக தற்காலிகப் பாடசாலைகள் இயங்கி வரும் வகுப்பறைகளில் நிரந்தர பாடசாலை ஒன்றை ஸ்தாபிக்குமாறு அப்பகுதி மக்கள் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரை மகஜர் மூலம் கோரியுள்ளனர்.

இப்பகுதியில் பாடசாலை அமைப்பதற்கு மூன்று ஏக்கர் காணி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இங்கு 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 1996ஆம் ஆண்டு வரை முகாவில் அ.த.க. பாடசாலையும் 1997ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரை இயக்கச்சி அ.த.க.பாடசாலையும் இயங்கி வந்தன. கிளாலி றோ.க.த.க.பாடசாலை தற்போது இக்கட்டடத்தில் இயங்கி வருகிறது. ஆகவே, இந்த இடத்தில் நிரந்தரப் பாடசாலை ஒன்றை ஸ்தாபிக்க ஆவன செய்யவேண்டும்.

-இவ்வாறு மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-117)

# மாகாண பாடசாலைகள் மட்ட விளையாட்டுப் போட்டி 4 பிரிவுகளாக

யாழ்ப்பாணம்,மே26

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி இம்முறை நான்கு பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

முதலாவது பிரிவாக உடற் பயிற்சிப்போட்டி எதிர்வரும் ஜூன் மாதம் 8 ஆம் திகதி திருகோணமலை மக்ஹெய்சர் விளையாட்டரங்கிலும், இரணடாவது பிரிவாக பெண்களுக்கான வலைப்பந்து, கரப்பந்து, எல்லே, கபடி ஆகிய போட்டிகள் எதிர்வரும் ஜூன் மாதம் 16 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை வவுனியாவிலும், மூன்றாவது பிரிவாக ஆண்களுக்கான கரப்பந்து, உதைபந்து, மென்பந்துக்கிரிகெட், கபடி, எல்லே, செஸ் ஆகிய போட்டிகள் ஜூன் மாதம் 23 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை திருகோணமலையிலும், நான்காவது பிரிவாக மெய்வன்மைப் போட்டிகள் ஜூலை மாதம் 1ஆம் திகதி முதல் 4ஆம் திகதி வரை திருகோணமலை மக்ஹெய்சர் விளையாட்டரங்கிலும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

## தென்மாகாண......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கிறார்.

பெலியத்தையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், ரி-56 ரக துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார் என விசாரணைகளில் ஈடுபட்டிருக்கும் பொலீஸார் தெரிவித்தனர்.

இவர் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் தீவிர ஆதரவாளராவார். சம்பவத்தைக் கேள்வியுற்ற எதிர்க்கட்சித் தலைவர் உடனடியாகச் சம்பவ இடத்துக்குச் சென்று நேரில் பார்வையிட்டார் என பிரதி பொலஸ் மா அதிபர் போதி லியனகே தெரிவித்தார். (ஐ-3)

## அரசின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்துள்ள நோர்வே அனுசரணைக் குழுவின் ஆலோசகர் எரிக்சொல் ஹெய்ம் அரசின் யோசனை தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அரசின் சமாதானக்குழுவின் உறுப்பினர்களான அமைச்சர்கள் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், மிலிந்த மொறகொட, அரசின் சமாதானச் செயலணிக்குழுவின் பணிப்பாளர் பேர்னாட் குணதிலக ஆகியோருடன் விரிவாக ஆராய்ந்துள்ளார். இன்று காலை கொழும்பு வந்தடைவார் என எதிர்பார்க்கப்படும் நோர்வே அனுசரணைக்குழுவின் தலைவர் விடர் ஹெல்கிஸனுடன் சேர்ந்து எரிக் சொல்ஹெய்ம் நாளை வன்னி சென்று அரசின் யோசனைகள் அடங்கிய பதிலை விடுதலைப் புலிகளிடம் கையளிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ3-9)

எமது புதிய
வீடியோ CD வெளியீடு
நெப்போலியன் நடிக்கும்
மேரி ஆல்பர்ட்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்
(18431)

இந்திய பரம்பரை ஜோதிடர்
அருள்வாக்கு அம்பிகா அம்மா
மீண்டும் யாழ்.புண்ணிய பூமிக்கு வருகை.
கைரேகை. ஜாதகம் பார்க்கப்படும்.
உங்களுக்கு எந்தப் பிரச்சினைகள் ஆனாலும் கவலை வேண்டாம்.
உடனே அம்மாவைச் சந்தியுங்கள்; நன்மை அடையுங்கள்.
அம்மாவைச் சந்திக்கும் இடம்:-
அருள்வாக்கு அம்பிகா அம்மா
மடோனா லொட்ஜ்,
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ஸ்ரீமுருகன் ஜுவல்லர்ஸ் / நியூ லிங்கம் கூல்பார் அருகில்.
(18414)

RAMCO CEMENT
ராம்கோ சிமெந்து
SLS - 107 அங்கீகாரம் பெற்றது
ISO - 9002 தரம் பெற்றது
BSS - 12-1991 தரத்திற்கு அமைவானது
ஆசியாவில் முதலாம் தர (நம்பர் 1)தொழிற்சாலையாகத் தெரிவுசெய்யப்பட்ட தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் RAMCO சிமெந்து (கோபுரம் மார்க்)என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.
குறிப்பு:- தற்போது ராம்கோ சிமெந்து பருத்தித்துறை இறங்கு துறையில் இறக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது.
எமது நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட பாரஊர்திகளை இன்று காலை 6.00மணிக்கு பருத்தித்துறை இறங்குதுறைக்குக் கொண்டு செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
முன்கூட்டியே பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நேரடியாக விநியோகிக்கப்படும்.
ராம்கோ சிமெந்து ஏக இறக்குமதியாளர்கள்
ஈஸ்வரபகவான் & கொம்பனி
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P :- 021-222 2350 (C28082)

யாழ். மக்களின் நலன் கருதி
EXPO AVIATION
LION AIR
SERENDIB EXPRESS
ஆகிய மூன்று விமானங்களுக்குமான
யாழ். - கொழும்பு
கொழும்பு - யாழ்.
விமான ரிக்கெற்றுக்களை
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள.....
ஹெப்பி இம்பெக்ஸ்
புதிய உயர் கல்லூரி
95, பருத்தித்துறை வீதி (ஆரிய குளம் முன்பாக),
யாழ்ப்பாணம். 021 - 222 6144
24 மணி நேர சேவைக்கு 077 - 6038505
(18417)

MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS
324.பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்
பதிவுகள் 28.05.2003 இற்கு முன் நேரில்
MCS

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.05.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.